உ

ஜோதிமயம்.

ரஞ்சித போதினி

கதை, காவியம், சரித்திரம், நவீனம், புராணம், இதிகாசம்,
அனுபவ முதலிய விஷயங்களைப் புனைந்துகொண்டு
வெளிவரும் ஓர் மாதாந்தரத் தமிழ்ப் பத்திரிகை.

"எப்பொருள் யார் யார் வாய்க்கேட்பினு மப்பொருள்
மெய்ப்பொருள் காண்ப தறிவு."—(தமிழ்மறை)

ஆசிரியர் :—தமிழ்ப்பூஷணம் ஸ்ரீ வாசுதேவ ராவ் கேய்க்வார்.

தொகுதி 2	ரக்தாக்ஷி ௵ ஆடி ௴ 1924 ௵ ஜூலை ௴	பகுதி 6

கடவுள் வணக்கம்.

ஈடறி யாதமுக் கண்ணுநின் னன்ப ரியல்பிணையிங்
நாடறி யாதுன் னருளன்றி யூண்சுவை நாவையன்றி
மேடறி யாதுநற் பாட்டைகற் றோரன்றி மேற்சுமந்த
வேடறி யாதவை யேனறி யா தன் றிகழ்வான்றே.

உத்தமராய் வாழ்வா ருலந்தக்கா லூற்றூர்கள்
செத்த மரமடுக்கித் தீயாமு—னுத்தமனுப்
நீளாழி நஞ்சுண்ட நெய்யாடி தன்றிறமே
கேளாழி நெஞ்சே கிளர்ந்து.

கிளர்ந்துந்து வெந்துயர் வந்தடும் போதஞ்சி நெஞ்ச மென்பாய்
தளர்ந்திங் கிருத்த றவிர்திகண்டாய் தளராது வந்தி
வளர்ந்துந்து கங்கையும் வானத் திடைவளர் கோட்டு வெள்ளை
யிளந்திங்களும் மெருக் கும்மிருக் குஞ்சென்னி யீசனுக்கே.

ரஞ்சித போதினி

ஓர் மாதாந்தரத் தமிழ்ப் பத்திரிகை.

ருத்ரோத்காரி௵ ஆடி௴ 1924௵ ஜூலை௴

நமது நாட்டின் முன்னேற்றம்

நாம் தற்காலம் மிகுந்த துன்பத்தையும் வறுமையையும் அனுபவிப்பதற்குக் காரணமும், நாம் உற்சாகமின்றி ஊக்கத்தி லிருப்பதற்குக் காரணமும் யார் என்பதைச் சிறிது சிந்திப்போமாயின் இனிது விளங்கும். அது யாரெனின், தாய்மாரேயாகும். தற்காலம் நமது நாட்டுச் சிறுமிகளுக்குப் போதிக்கப்படும்கல்வி பூரண மதக்கல்வியாகயில்லாமல் சாதாரணமான கல்வியாக யிருப்பதினாலும், அவர்கள் நற்குண நற்செய்கைகளில் பழக்கப்படாமையுமேயாகும். தாய் எவ்வழியோ அவ்வழியே சேயுமிருக்குமென்பது மேதாவிகளின் கருத்து. தாய்மார்கள் கல்வியில் தேர்ச்சிபெற்று தம் கருப்பகாலத்தில் வீரதீர பராக்கிரம சௌரியவான்களான க்ஷத்திரிய வீரர்களின் சரித்திரங்களைப் பிறருக்குக்கூறி யவர்களும் அவ்வழக்கங்களை யநுசரிக்கும்படி போதிப்பார்களாயின், இதே வழக்கம் கருவிலிருக்கும் சிசுவிற்கும் ஏற்படுமென்பது மேதாவிகளின் மேன்மையான கருத்தாகும். இதற்குச்சான்றாக இவண் சிறிது கூறுவாம்.

சிவாஜியென்னும் மஹாராஷ்டிர வீரனின் மாதாவானவள் சிவாஜியைக் கருவுற்றிருந்த சமயம் சிவாஜியின் தகப்பனார் போர்மேற்கொண்டு தனது தளகர்த்தர்களோடு காடு, மலை, வனம், வனாந்திரங்களிற் சுற்றித்திரிந்த சமயம் தானும் கணவனை விடாது பின்பற்றிய தன்காரணமாக அவ்வம்மைக்குப் பிறந்த குமாரனாகிய சிவாஜி யென்னும் மஹாராஷ்டிர க்ஷத்திரிய வீரனும் மிகுந்த வீரதீரமுடையனாய், மிலேச்சர்களால் அழிந்து இருந்த இடந்தெரியாமல் ஒழிந்துவிடும் நிலைமையிலிருந்த ஹிந்து மதத்தைப் புனருத்தாரணம் செய்யாவண்ணம் இருந்த நிலைபிலிருக்கக் கங்கணம்கட்டி, மிலேச்சர்களை யெதிர்த்து விரட்டி யோட்டி நிலை நிறுத்தினார். ஆதலினால் வீரதீரச்செயல்கள் உற்பத்தியாவது ஸ்திரீகளிடமே யாதலினால், ஸ்திரீகள் பூரணமானதான நம் பூர்வீகர்களின் சரித்திரங்களை வாசிக்கவும் ஊக்கத்துடன் பிரதிகாரியங்களைச்செய்யவும் நாம் அவர்களைப் பழக்குவிக்காதவரையில் நமது நாடு முன்னேற்ற மடையாதென்பது திண்ணம்.

நமது நாட்டின் முன்னேற்றம் நமது மங்கையரிடத்தும், சிறுவரிடத்துமே யிருக்கின்றபடியினால் நம் நாட்டுச் சிறுவர்களும் சிறுமிகளும் முக்கியமாய் புராதன நாகரீக முறையிலுள்ள கல்வியைப் பயிலவேண்டிய முறைகளை யநுசரிக்க நாம் முயற்சித்தாகவேண்டும்.

பூர்வகாலத்திலிருந்த நம் நாட்டு நாரீமணிகளின் சரித்திரங்களை நம் தற்காலக்குழந்தைகள் வாசிக்க வேண்டுவது அவசியமென்பதை யொவ்வொருவரும் உணர்ந்து நடத்தல் சாலச்சிறப்புடையது.

நமது நாட்டவர்களுக்கு நம் நாட்டுப் பழக்க வழக்கத்தை யொட்டிய கதைகளே சாலச்சிறப்புடையதாகுமேயல்லது மேல்நாட்டு நாகரீகமுடைய கல்வி சிறப்புடையதாகாது. ஆனால் மேல்நாட்டுக் கல்வியானது நம்மை யடிமைத்தனத்தி லாழ்த்திவிடும். ஆங்கிலம் வாசித்தவர்களில் ஆயிரத்திலொருவர்கூட ஸ்வயமான தொழில் செய்பவர்களாயிருக்கவில்லையென்று நாம் கூறாமலேவிளங்கும். ஆதலினால் இனியேனும் நம்மவர்கள் நமது சிறுவர் சிறுமிகளுக்குப் பூர்வீகசரித்திரங்களைப் போதிப்பதுடன் நம் நாட்டுக் கைத்தொழில்களை யபிவிருத்தி செய்து விவசாயம், வியாபாரம் முதலியன பெருகும் நெறியைப் போதித்து, கீதையையும், அதினுட் பொதிந்திருக்கும் சாராம்சத்தையும் உள்ளது உள்ளபடி விளங்கும்வண்ணம் மொழிபெயர்த்து ஸ்ரீ கிருஷ்ண பரமாத்மாவினால் அருச்சுனனுக்கு உபதேசித்த விதத்தையும் போதித்து அவர்களை நமது நாட்டு வீரர்களாக விளங்கச் செய்வது நலமாகும்.

நம் நாட்டு நாரீமணிகளாக வரக்கூடிய நிலைமையிலுள்ள சிறுமிகளை செஞ்சிக்கோட்டையின் இராணியான இரஜபுத்ர மங்கைக்கு நிகராகுமாறும், இந்தியத் தாய்மாரி லொருத்தியான அதாவது "நீ போருக்குச் சென்று புறமுதுகிட்டனையெனக் கேட்பேனாயின் நினக்குப் பாலூட்டி நின்னைப்போஷித்த என் ஸ்தனத்தை யவண் வந்து அறுத்தெறிவே"னென்று கூறிய மங்கைபோலும், சகல திசைகளையும் ஜயங்கொண்டு திறை செலுத்தும்படிச்செய்து மதுரையை யாண்ட மீனாட்சி தேவியைப்போலும் வளர்த்து கல்வி பயிற்றுவிப்பதுதான் நமது முக்கிய கடமையாகும். அவ்விதம் செய்யாதவரையில் நம்மவர்களுக்கு மேன்மையென்பது ஏற்படுமென்று கூறவியலாததாகும்.

நண்பர்காள்! நாம் செய்யவேண்டிய விஷயங்களைச் செய்ய முற்படாதவரையில், நமது நாடு முன்னேற்றமடைய முடியாது என்று நாம் கூறவேண்டுவதின்றாம்.

அடுத்தமாதமுதல் இந்திய வீரத்தாய்மாரின் சரித்திரங்களை எழுதுவோமாக. ஓம் தத் ஸத். ஆசிரியர்.

இரத்தினமாலை அல்லது இரு கொலைகளின் இரகஸ்யம்

வெகு ருசிகரமான துப்பறியும் தமிழ் நாவல். அணா 6.

ரஞ்சித போதினி சந்தாதாரர்களுக்கு மாத்திரம் விலை அணா 4

விலாசம்:—மானேஜர், "ரஞ்சிதபோதினி" ஆபீஸ்.

12, அருணாசல முதலி தெருவு; சௌகார்பேட்டை மதராஸ்.

புனிதவதி என்னும் காரைக்காலம்மையார் புராணம்
(முன் தொடர்ச்சி).

கடந்த வைகாசிமாதத்திய சஞ்சிகையில் கூறினுமெனினும் இன்னும் சிறிது கூறி மேற்சொல்லுவது கருதி இன்னும் சிறிதுகூறி மேற் செல்லுவாம்.

(1) எத்துணையானும் இயைந்த அளவு சிறுதருமஞ் செய்தவர் மேன்மை யெய்துவர். அங்ஙனஞ் செய்யாதவர்கள் பெருஞ் செல்வவான்களாய் இன்னுஞ்சிறிது காலஞ்சென்று செய்வாமென் றெண்ணுவாராயின் அவர்கள் பழியென்னும் கடலுள் ஆழ்பவராவார்.

(2) பொருளுடையவனுய ஒருவன் தானும் அநுபவிக்காமலும், பிறருக்குக் கொடாமலும் புதைத்து வைப்பானாயின், அத்தகைய மடையனை அவனல் சேகரித்து வைக்கப்பட்ட தனம் அவனது அந்தியகாலத்தில் அவனைப்பார்த்து ஏளனம் புரியும்.

(3) கையில் செல்வமிருக்கும் சமயம் அறஞ்செய்ய முற்படவேண்டும். இன்றேல் நமக்குச் சத்துருவாய் நோய், மூப்பு, மரணம் முதலியன தொடர்ந்து நம்மையழித்துவிட்டு முன்னேறவொட்டாது.

(4) தானஞ்செய்து வாழ்தலே சிறப்புடையதாவதோடு மேன்மையுமளிக்கும். அங்ஙனமின்றேல் உலகத்தவர் லோபியெனும் பெயரளித்து இழித்துரைப்பர்.

(5) அறமியற்றுவோன் ஊர் நடுவிலிருக்கும் பெண் பனைக்குச் சமதையாகிறான். அறமியற்றாதவன் இடுகாடுள்ளிருக்கும் ஆண்பனையொப்பாவான்.

(6) இயன்றளவு தருமஞ் செய்வதனல் நமக்குச் செல்வஞ் சேரும். எங்ஙனமெனின், வீடுகள்தோறும் புகுந்து ஐயமெடுப்போனது பாத்திரம் நிறைவது போலாம்.

(7) தருமஞ் செய்பவர்களின் பெருமையானது மூவுலகத்திலும் விசேஷித்திருக்கும்.

(8) செல்வம் பெற்றதன் மூலம் ஏழைகளைப் போஷித்து, கல்விதானம் முதலியன செய்வதனல் மோக்ஷ மெய்தலாகும்.

(9) மானிடராய்ப் பிறந்ததன் பெற்றி தருமஞ்செய்தலும், உறவின் முறையாரை யாதரித்தலுமேயாகும்,

இன்னும் பல விஷயங்கள் கூறலாமெனின் விரியுமென இத்துடனிறுத்தி மேற்செல்லுவாம்.

21. மூப்புறுமத் தளர்வாலு முதிர்ந்து மூடுகிய வேட்கைத்
தீப்பசியி னிலையாலு மயர்ந்தணைந்த திருத்தொண்டர்
வாய்ப்புறுமென் சுவையடிசின் மாங்கனியோ டினிதருந்திப்
பூப்பயின்மென் குழன்மடவார் செயலுவந்து போயினர்.

(இ–ள்.) மூப்புறும் அத்தளர்வு என்பதனானே கிழப்பருவத்தி லேற்படும் தளர்ச்சியாகும். இதனை,

“ தலைமயிர் கொக்குக் கொக்க நரைத்துக்
கலகலெ னப்புக் கட்டது விட்டுத்
தளர்நடை பட்டுத் தத்தடி யிட்டுத்—தடுமாறி
தடிகொடு திக்கிக் கக்கல் பெருத்திட்
டசனமும் விக்கிச் சத்தி யெடுத்துச்
சளியு மிகுத்துப் பித்தமு முற்றிப்—பலகாலுஞ்
சிலதயி லத்திட் டொக்க வெரிக்கத்
திரிபலை சுக்குத் திப்பிலி யிட்டுத்
தெளிய வடித்துத் துற்றுட லுற்றிட்—டுயிர்போம்”—115

என்று கூறியிருப்பதனானே அம்மையாரின் அருமைத் திருமனையின் கண்நுழைந்த அதிதியின் நிலைமையையும் அவருக் கேற்பட்டிருந்த தான தீப்பசியினை விவரிக்குங்கால்,

“ குடிப்பிறப் பழிக்கும் விழுப்பங் கொல்லும்
பிடித்த கல்விப் பெருபுணை விடூஉ
நாணணி களையு மாணெழில் சிதைக்கும்
பூண்முலை மாதரோடு புறங்கடை நிறுத்தும்
பசிப்பிணி யென்னும் பாவியது தீர்த்தோர்
இசைச்சொ லளவைக் கென்னா நிமிராது” 116

என்றும். பசியானது இன்னதினையதையே புசிக்கவேண்டு மென்னும் பகுத்தறிதலையுந் துறக்குமென்பதை,

“ புன்மரம் புகையப் புகையழற் பொங்கி
மன்னுயிர் மடிய மழைவளங் கரத்தலி
னரசுதலை நீங்கி வருமறை யந்தண
னிருநில மருங்கின் யாங்கணுந் திரிவோ
னரும்பசி களைய வாற்றுவது காணான்
திருந்தா நாயூன் றின்னுத லுறுவோன்” 117

என்றும் காண்பதனாலும், கௌசிகன் பசிப்பிணியினைச் சகிக்க மாட்டாமல் நாய் மாமிசத்தைத் தின்பதற்கு முயன்றன னென்பதை மநுஸ்மிருதியில் 10-ம் அத்தியாயத்தின் 108-ம் ஸ்லோக மூலமாய்க் காணக்கிடைப்பதனாலும் பசிப்பிணி யொழிக்க வேண்டுமென்பதைப் பல்லரும் அறிந்து அத்துன்பத் துறுவோரைப் போஷிப்பது சாலச் சிறந்ததாலும், இத்தகைய கருமத்தை மேற்கொண்ட அம்மையார் தம் வீடுபுகுந்த அடியார் பசிதீரவுண்பிப்பது கருதி மாங்கனியோடு இனிய உணவினை யவருண்ண உபசரித்தலும், அடியார் வாசனை மிகுந்த கூந்தலினையுடை யவரும் உலகத்தில் உயரிய புகழினைப்பெறக் கூடியவருமான புனிதவதியாரின் தருமச் செய்கையைப் புகழ்ந்து கொண்டு ஆசீர்வதித்துச் சென்றார். (தொடரும்). கேய்க்வார்.

115 திருப்புகழ் 116, 117 மணிமேகலை.

பார்த்திப சிவபக்த்தி.

(முன் தொடர்ச்சி.)

"அடே அர்ச்சுனா! நீ அநேக அரசர்களை உன்னுடைய வில்வித்தையின் சாமார்த்தியத்தால் ஜயித்தபடியினால் விஜயன் 'என்று பெயர் பெற்றது வாஸ்தவமாக யிருக்கும் பட்சத்தில் உன்னுடைய திறமையை என்னிடம் காட்டு பார்ப்போம்" என்று சொன்னார்.

அர்ச்சுனன் "ஆஹா அப்படியா! சற்று இரு. ஓடிப்போகாதே பயலே" என்று சொல்லிவிட்டு தன் முழு கவனத்தையும் சிவபிரானிடத்தில் வைத்து, தன்னுடைய காண்டீபம் என்னும் வில்லைக் கையில் கொண்டு ஆர்ப்பரித்து வில்வளைத்து சிவபெருமான்மேல் ஒரு கணை தொடுத்தான். சிவபெருமான் மற்றகணையால் அதைத் தடுத்தார். இப்படியாக அவர்கள் இருவருக்கும் வெகு நேரம் வரையில் போர் நடந்தது. பிற்பாடு சிவபெருமான் ஒருபாணம் தொடுத்து அர்ச்சுனனுடைய வில்நாண் இரண்டாகப் போகும்படியாய் தொடுத்தார். அருச்சுனனுடைய வில் அறுந்துவிடவே அவன மல்யுத்தத்துக்கு வரும்படியாய் ஆஞ்ஞாபித்தான். பிறகு இருவருக்கும் மல்யுத்தம் நடந்தது. கடைசியில் அர்ச்சுனன் கோபங்கொண்டு அதிமூர்க்கமாய் சிவபிரானிடத்தில் பாய்ந்து அவர் தலையில் ஓர் அடி கொடுத்தான். அந்த அடியானது சுவர்க்கம், பாதாளம், பூலோகம் முதலிய ஏழு லோகங்களிலுள்ளவர் பேரிலும்; தேவதைகள்பேரிலும் தன் பேரிலும் அடி விழுந்தது. பிறகு சிவபெருமான் ஆகாயத்தில் தூக்கி எறிந்துவிட்டு மறைந்தருளினார்.

அர்ச்சுனன் மேலே இருந்து கீழேவந்ததும் தன் எதிரியாகிய வேடுவத்தலைவனையும், வேடர்களையும் காணாமல் திகைத்து நாலாபக்கமும் பார்க்க, அவனுடைய ஆச்சரியத்தை என்னவென்று சொல்லுவது ஆகாயத்தில் தேவ துந்துபி முழங்கவும், மந்தார பாரிஜாத புஷ்பங்கள் சொரியவும் அப்சரஸ்திரீகள் நடனமாடிக்கொண்டிருக்கவும், அன்னவாகனத்தின்மேல் பிரமனும், கருடவாகனத்தின் மேல் ஆதிசேஷசயனரான மஹாவிஷ்ணுவும், இருஷபவாகனத்தில் பார்வதி சமேதராய், முப்பத்திமுக்கோடி தேவர்களுடன் சாம்பமூர்த்தியானவராயும் தன்னுடைய பிராணனைவாங்க வரும் எமதருமராஜனுடைய பாசத்தால் கட்டுண்டபோது, தன்னை ஸ்தோத்திரம் செய்து கொண்டு இருக்கும் மார்க்கண்டனுக்கு அபயஸ்தம்கொடுக்க அஞ்சேல்! அஞ்சேல்!! இதோ உன்னை யம பாசததினின்றும் ரக்ஷிக்கவந்து விட்டேன் என்று படார் என்று சிவலிங்கத்தைப் பிளந்து கொண்டு, வெளியேவந்து அவனைக் காலபாசததிலிருந்து விலக்கி என்றும் சிரஞ்சீவியாய் வாழக்கடவது என்று வாழ்த்தியவனையும் கல்யாண குணசீலராயும் உள்ள சிவபிரான் அர்ச்சுனனுக்குத திவ்ய காட்சி கொடுததார்.

இதைக்கண்ட அர்ச்சுனன் பரவசமடைந்து ஆனந்தபாஷ்பம் சொரிந்து:—

தேவாரம்

"மண்ணல்லே விண்ணல்லே வலயமல்லே மலேயல்லே கடலல்லே
வாயுவல்லே யெண்ணல்லே யெழுத்தல்லே யெரியுமல்லே யிரவல்லே
பகலல்லே யாவுமல்லே பெண்ணல்லே யாணல்லே பேடுமல்லே பிறிதல்லே"

என இப்படியாக பலவாருகத் துதித்து சாஷ்டாங்கமாய் நமஸ்கரித்து, மெய்மயிர் சிலிர்த்து கைகட்டி வாய்பொத்தி தான் அறியாமையினுலும் மாயைபாலும் சிவபிரானிடத்து போர் புரிந்ததையும் பல வார்தைகள் சொல்லியதையும் நினைத்து உருகி மனங்கரைந்து கண்ணீர் விடுத்து ஸ்தம்பமாய் நின்ருன்.

அப்படி நின்ருனே சிவபெருமான் வாரியெடுத்து மடிமீதிருத்தி, கொஞ்சிக்குலாவி அர்சுனனேப் பார்த்து சொல்லுகிருர்:—

" ஏ பார்த்திபா! விஜயா! ஏ பக்தசிரோன்மணியே! உன்னுடைய தவத்தைமெச்சினேன். நீ என்னேடுயுத்தம் புரிந்தது எனக்கு பூஜை செய்ததுபோல் ஆயிற்று. நீ தொடுத்த பாணங்கள் என்னே அர்ச்சித்த மலர்கள். நீ என் தலேயில் அடித்தது எனக்கு என்சிரசில் சூட்டிய வில்வமாலே, ஆகையால் நீ ஆயாசப்பட வேண்டாம் என்று தேற்றி, அவனுடைய தைரியத்துக்கும், வீர்யத்துக்கும் அவனுடைய வில்வித்தைக்கும் மெச்சினவராய் அவனுக்கு ஒடியாதவில்லும் அருத நாணும் என்றும் குறையாத அம்புப்புட்டியும், அவன் கோரி வந்த பாசுபதாஸ்திரமும் இன்னும் அநேக வரங்களும் கொடுத்து விட்டு மறைந்தருளினர். சுபம்! சுபம்!! சுபம்!!!

B. S. வெங்கட்டராமன், கோயம்புத்தூர்.

கதர்.

கதர் என்பது கைராட்டினத்தில் நூற்ற நூலேக்கொண்டு கைத் தறியில் நெய்த ஆடையாகும்.

இருநூற்ருண்டுகளுக்கு முன்னே உலகத்தாருடைய மானத்தைக்காத்துவந்த இந்தியாவாகிய நாம் சிலகாலத்திற்குப் பிறகு சில அன்னியரின் சூழ்ச்சியால் நம்தேச நெசவுத் தொழில நாசபடைந்தது. நாளடைவில் பிறநாட்டாருக்குத் தேவையான ஆடைகளே யனுப்பிவந்த நாமே நமக்கு வேண்டிய ஆடைக்கு அந்நிய தேசத்தை எதிர்ப்பார்க்கலாயினேம். நமது தேசம் தாழ்மையான நிலேமைக்கு வந்ததற்குக் காரணம் இதுவே.

முன்காலத்தில் மெல்லிய நேர்த்தியான ஆடைகளே உலகத்தாருக்கு விநியோகிப்பதில் இந்தியாவே மிகவும் மேன்மையான பெயரைப் பெற்றிருந்தது. அத்தகைய இந்தியா, இப்போது வரு

ஷம் 1-க்கு சுமார் 60-கோடி ரூபாய் பெறுமான துணிகளை இறக்குமதி செய்கின்றதெனின், அது முன்னடைந்திருக்கிறதோ அல்லது பின்னடைந்திருக்கிறதோ என்பதை நேயர்களே ஊகித்துக்கொள்க.

நாகரீகமுதிர்ச்சி பெற்று, சுய அறிவு அடைந்த எவரும் தம் நாட்டில் நெய்யப்பட்ட ஆடைகளை உடுத்திக்கொள்வதை ஓர் அவமானமாகக் கருதவில்லை. ஆனால், இந்தியாவில் தற்சமயம் பல்லாயிரம்பேர் சுதேச ஆடைகளை அணிந்துகொள்வதை ஓர் அவமானமாகக் கருதுகின்றனர். இது ஆச்சர்யத்தினும் ஆச்சர்யமாகவே அயல்நாட்டாருக்குத் தோன்றும். தம் நாட்டிலே நெய்யப்பட்ட துணியை உடுத்திக்கொள்ள மறுப்போர் மனித உணர்ச்சியும், தேச உணர்ச்சியுமற்றவர் என்றே கருதவேண்டும். சில அன்பர்கள் சுதேசத்துணிகளை அணிவது நாகரீகத்திற்கும் கௌரவத்திற்கும் குறைவென்று கருதுகிறார்கள். சுதேசத்துணிகளை அணிவது சுயமரியாதையைக் காப்பாற்றிக்கொள்வது போலாகும். அந்த சுயமரியாதையைக் காப்பாற்றிக்கொள்ளுதல் கௌரவக்குறைவென்றும், நாகரீகக் குறைவென்றும் நினைப்பது அறியாமையினும் அறியாமையேயாம். சுமார் இருநூறு ஆண்டுகளாக மேனாட்டு நாகரீக மயக்கத்தால் கட்டுண்டு கிடக்கும் நமக்கு இப்பொழுது சுதேசியத்தை அநுஷ்டிப்பதென்றால் சிறிது கடினமாகவே தோன்றலாம். கிளாஸ்கோ மல் கட்டுவதையும், காலர் (கழுத்துப்பட்டை), ஓபன்கோட், மப்பிளர், பூட்ஸ் முதலியவைகள் அணிந்து கொள்வதையும் நாம் இதுகாறும் நாகரீகமாகக் கருதிவிட்டோம். இனி அதனின்றும் மாறுபடுவது நமக்கு விரோதமாகவே இருக்கிறது.

சுதேசித்துணிகள் என்று சொல்லப்படும் கதர்துணிகள் முரடாயிருப்பதாகவும், மெல்லிய இழையோடு கூடியனவாக வந்தால் அப்பொழுது சுதேசியத்தைக் கைக்கொள்ளலாமென்றும் சிலர் கூறுகின்றார்கள். இவருடைய தேசபக்தியை நாம் வியந்து பாராட்டுகிறோம். நூற்றைம்பது வருஷகாலமாக தலையெடாதிருந்த இந்திய நெசவுத்தொழில் இப்பொழுது சிறிது தலையெடுத்திருக்கிறது. பல்லாண்டுகளாக நோய்வாய்ப்பட்டுக் கிடந்த ஒருவன் பலவிதமான ஔஷதங்கள் கொடுக்கப்பட்டுச் சிறிது குணமடைகிறான் என்று வைத்துக்கொள்வோம். சிறிது சிறிதாகக் குணப்பட்டுவரும்பொழுதே அவனிடத்தில் நோய் வாய்ப்படுமுன்னர் அவனிடத்திலிருந்த பலத்தையும் மற்றவற்றையும் எதிர்பார்ப்பது கூடாதன்றோ? அதுபோலவே சுமார் இருநூறு ஆண்டுகளாக நசுக்கப்பட்டு அழுந்திக்கிடந்த இந்திய நெசவுத்தொழில் இப்பொழுதே தலைகாட்ட ஆரம்பித்திருக்கிறது. இந்த ஆரம்பத்திலேயே நாம் பழைய டாக்கா மஸ்லின்களையும் கிளாஸ்கோ மல் போன்றனவற்றையும் எதிர்பார்ப்பது எங்ஙனம் பொருந்தும்? ஆனால் இத்தகையோருக்கு திருப்தியுண்டாகுமாறு சிறிது

காலமாக மிகவும் மெல்லிய இழைகளைக்கொண்ட கையா லாக்கப் பட்ட வஸ்திரங்கள் தோன்றிக்கொண்டிருக்கின்றன மிருதுவான வஸ்திரத்தின் தன்மையை விரும்பும் அன்பர்காள் இந்த வஸ்திரங் களை உடுத்திக்கொள்ளலாம். தேசம் நெருக்கடியான நிலைமையிலிருக் கும் போதும், நாம் நமது பிறப்புரிமைக்காக தவித்துக்கொண்டிருக் கும்பொழுதும் ஏழைமக்கள் ஒரு வேளை உணவுக்கும், சிறிது கந் தைக்கும் பறந்து கொண்டிருக்கும்போதும் நாம் மெல்லிய துணி களின்மீது ஆசைகொள்வதும் சுதேசியத்தை ஆதரியாமலிருப்பதும் வெறுக்கத் தக்கனவாம். தேச முழுவதும் கஷ்டப்பட்டுக்கொண் டிருக்கும்பொழுது, நாம் ஏன் முரட்டுத்துணிகளை உடுத்திக்கொள் ளக்கூடாது? சிறிதுகாலம் கஷ்டத்தை யநுபவிப்போமே. துன் பத்திற்கு பின்னறன்றோ இன்பம் உண்டாகும் சுதேசித் துணிகள் அல்லது கதர் துணிகள் முரடாயிருக்கின்றன என்ன காரணத்தினல் அவைகளைக் கட்டிக்கொள்ளக் கஷ்டப்படும் அன்பர்கள் நம்தேசத் தில் நெய்யப்பட்ட ஆடையைக் கட்டிக் கொண்டிருக்கிறோம். இத னல் பல்லாயிரம் ஏழைமக்கள் உணவு பெறுவதற்கு உதவி செய் கிறோம் என்ற சந்தோஷத்தையடைந்து தங்கள் துன்பத்தை மறந் திருக்கக்கூடாதா? நம்முடைய அற்பசுகத்தை எண்ணி, பல்லாயிரம் ஏழைமக்களைப் பட்டினி போடலாமா? நமது கைத்தொழில்களை ஆதரியாமலிருக்கலாமா? இதனை அன்பர் ஒவ்வொருவரும் சிந்தித் துப் பார்த்தல் நலம். முரட்டுத்துணிகளை வாங்கி உடுத்தி அத்துணி நெய்வோரை உற்சாகப்படுத்தினலன்றி அவர் மெல்லிய துணிகளை எங்ஙனம் நெய்தல் கூடும்?

நமது தேசத்தார் முன்போல் புத்துயிர்பெற்று வாழ நெசவுத் தொழிலை ஆரம்பிக்கவேண்டும். இதனல் பல ஏழைக் குடும்பங்களின் ஜீவனத்திற்கு ஏதுவாகிறது. நம் தேச பொருளாதார நிலைமை சிரடையும். நாம் பிரத்தியக்ஷமாய் நமது ஏழை பாமர ஜனங்கள் மில் ஆபீஸ்களிலுள்ள இயந்திரங்களில் படும் பாட்டைப் பார்க்கிறோ மல்லவா? அவர்கள் காலை ஆறுமணிமுதல் மாலை ஆறுமணிவரையில் ஒய்வு இல்லாமல் மிகவும் கஷ்டப்பட்டு வேலை செய்துவந்தால் அவர் களுக்கு எட்டு அணாவுக்குமேல் கிடைக்கிறதில்லை. இப்பொழுது நமக்கு நன்மையைக் கோரி நடக்கும் நம் மகாத்மா காந்தி யடிகளால் அளிக்கப்பட்ட கைராட்டினத்தினலேயோ என்றால், சாதாரணமாக இயந்திரத்தில் வேலை செய்யக்கூடிய ஒருவன் தினம் 1-க்கு ரூபாய் ஒன்று சம்பாதிக்கலாம், இயந்திரங்களின் உதவியால் நன்மைபடை யாத ஏழைமக்களில் பல்லாயிரம் பேர், கைராட்டினங்களின் உதவி யால் நன்மையை யடையக்கூடும் என்பதை பஞ்சகாலத்தில் நிதரிசன மாகக் காணலாம். சகோதர சகோதரிகாள்! நமக்கு இப்படிச் சுலப மாக சம்பாதிக்கும் வழியைக் கொடுக்கும் நம் கைராட்டினத்தை

இதுமுதல் கைக்கொண்டு அதன்படி சுதேச நூல் நூற்று ஜீவிப்பீர்களாக. இது பல ஏழை ஜனங்களின் ஜீவனத்திற்கு ஏதுவாயிருக்கின்றது. நமக்கு வேண்டிய உணவுப் பொருள் நம் தேசத்திலேயே விளைவித்துக்கொள்வதைப்போல் உடை விஷயத்திலும் நாம் அந்நிய தேசத்தாரை எதிர்பார்க்கவேண்டியதில்லை'என்று நிரூபிக்கவேண்டும். இதுவே நாம் நம் தேசத்திற்குச் செய்யவேண்டிய தொண்டு. இக்காரியத்தை எவராகிலும் மறுத்துப் பேசுவாரேயானால் அவர் நம் தேசத்திற்கு விரோதியென்பதில் தடையில்லை. நாம் அந்நிய ஆடையை அணிந்திருக்கும் வரையில் "பாரத புத்ரன்" என்று சொல்லிக்கொள்ள முடியாது. இன்னும் நமது கைராட்டினத்தைப் பாவச் செய்யவேண்டுமென்ற நோக்கததையுடைய பல வைதீக சாஸ்திர அறிஞர்களான கற்றுவல்ல பெரியவர்கள் தங்களது ஆராய்ச்சியையும் விடுத்து கிராமங்கள் தோறும் சென்று சுதேசிய பிரசங்கம் செய்து வருகிறார்கள். ஏழைமக்களுக்கு நன்மையைத் தராவிட்டால் அவர்கள் இந்த சுதேசிய பிரசங்கத்தை ஆரம்பித்திருக்கவே மாட்டார்கள். ஏழை மக்களுக்கு கைராட்டினங்களும, கைத்தறிகளும் உணவளிப்பதுபோல இயந்திரங்களும், தொழிற்சாலைகளும் உணவளிப்பதில்லை.

இன்னும் கைத்தறி நெசவுத் தொழிலில் எவருக்கும் எவ்விதத் தீங்கும் உண்டாவதில்லை. இயந்திரங்களினால் அன்றாடம் நேரும் சேதங்களை நாம் கண்டும் கேட்டும் வருகிறோம். ஏழைமக்களுடைய தேகசக்தியும், ஒழுக்கமும், பிறநற்குணங்களும் தொழிற் சாலைகளினாலேயே கெட்டுப் போகின்றன வென்பது அறிஞரிற் பலருடைய அபிப்பிராயம். கைத்தறி நெசவுத்தொழிலில் இத்தகைய தீங்குகள் உண்டாவதில்லை. இவ்வண்ணம் உணர்ந்தே திருவள்ளுவரும் நெசவுத் தொழிலையே தமது வாழ்க்கைக்கு வழியாகக்கொண்டார்.

ஆதலின் தமிழ் நாட்டுச் சகோதரர்காள்! இனியேனும் சுதேசிய விரதத்தைக் கைக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன். சுதேசிய விரதத்தைக் கைக்கொள்வது அவமானமில்லை. அகௌரவமில்லை. அநியாயமில்லை. அவிவேகமில்லை. இதனால் எவரும் துன்பப்படமாட்டார். எவரும் நிந்திக்கமாட்டார். இந்த அற்ப தியாகத்தையும் செய்ய நாம் பின்வாங்கினால் நம்முடைய சுயராஜ்ய இச்சை எக்காலத்தும் தணியாது. சுதேசியவிரதத்தை அரசாங்க உத்தியோகஸ்தர்களும் கைக்கொள்ளலாம். சில அரசாங்க ஊழியர்கள் சுதேச வஸ்திரங்களைத் தரித்துக்கொண்டால் தங்களுடைய உத்தியோகத்திற்கு எங்கு அழிவு உண்டாகிவிடுகிறதோ என்று அஞ்சுகின்றார்கள். இவர்களைப்போன்ற கோழைகளும் உண்டோ? தன்வீட்டு இன்பத்தைத் தான் அநுபவிப்பதை எவர் தடுக்கக்கூடும்? உதாரணமாக தற்சமயம் நடந்த ஒரு விஷயம் கூறுகிறேன். அதாவது நமது கற்றுவல்லவரும் தேசியத் தொழிலுக்குக் காரணராக உள்ளவரும், மிகவும் பணக்காரருமாகிய ஸி. ஆர். தாஸ் என்பவர் தான்பாரிஸ்டர்

பரீக்ஷை பாஸ் ஆகி வக்கீல் உத்தியோகம் பார்த்துக் கொண்டிருந்தார். இப்பொழுது அவர் தன்னுடைய உத்தியோகத்தை ரத்து செய்துவிட்டு தன்னிடத்திலுள்ள பொருளை ஏழைகளுக்குக் கொடுத்து தான் இந்தியர்களால் நெய்யப்பட்ட கதர் அணிந்துகொண்டு தேசீய முயற்சியில் முக்கிய கர்த்தராய் விளங்குகிறார். இவரும் ஒரு மனிதர்தானே. இவர் ஏன் இப்படி செய்யத் துணிந்தார். இவர் செய்தமாதிரியே நாம் ஏன் செய்யக்கூடாது? நாம் நம்முடைய நாட்டில் நெய்யப்பட்ட கதர் உடையை உடுத்திக்கொண்டு நம்நாட்டுத் தொழிலையே முன்னுக்கு கொண்டுவரும்படி முயலவேண்டும்.

மாதர்கள் முயன்றால் சுதேசியம் விரைவில் பரவும். ஒரு குடும்பத்தில் அனைவரும் சுதேசியவிரதம் எடுத்துக்கொள்வதற்கோ, எடுத்துக் கொள்ளாமலிருப்பதற்கோ அக்குடும்பத்திலுள்ள ஸ்திரீகளே முக்கிய காரணராய் இருக்கிறார்கள். ஸ்திரீகள் மனம் வைத்தால், இப்பொழுது தென்னாடு முழுவதையும் கதர் மயமாக்கி விடலாம். ஸ்திரீகள் முதலில் கதர் அணிகளை அணிந்து உணர்ச்சியில்லா ஆண் மக்களுக்கு வழிகாட்டவேண்டும். ஆதலின் தென்னாட்டுத் தாய்மார்களை ஒரு முறைக்குப் பன்முறை வேண்டிக்கொள்கிறேன. இந்தியா சுயராஜ்யம் பெறுவது உங்கள் விரதத்தினாலேயே. நூற்றுக்கணக்காகச் செலவழித்து பட்டுப் புடவைகளையும், சரிகை ரவிக்கைகளையும் அணிந்து கொள்வதில் விருப்பம் கொள்ளாதீர்கள். பாரதமாதா கஷ்டப்படுகிறாள். நீங்கள் சுகமாயிருக்க விரும்புகிறீர்களா? அவளுடைய துன்பநிலையை நோக்குங்கள். கதர் கதர் என்று கதறுங்கள். எல்லாரும் கதர் ஆடை உடுத்துங்கள். தாய் நாட்டிற்காக இச்சொற்ப காரியத்தையாவது செய்யவேண்டாமா? இப்படியே நமது பாரதத் தொண்டர்கள் எல்லாரும் நமது இந்திய நாடு நந்நிலைமை பெறும்படி செய்ய முன்னுக்கு வருவார்களென்று நம்புகிறேன்.

K. சாமிநாதன், ரத்தின விலாசம், எட்டயபுரம்.

ஸஹோதரத்வம்.

ஸஹோதரத்வம் என்றால் பேதமின்றி அனைவரையும் தனது சொந்த சஹோதரர்கள்போலப் பரிபூரணமாய் எண்ணி, மனமார்ந்த விசுவாசத்துடன் விளங்குவதாம். இதுதான் பெரிய புருஷார்த்தம். கடவுள் ஜீவகோடிகட்கு உள்ளமுவந்து தந்தருளி யிருப்பது இந்த ஸஹோதரத்வ உணர்ச்சியே. இவ்வுணர்ச்சி ஜனசமூகத்தின் ஸ்ஷேம ஸ்தாபன ஹேதுகரம் இது மிக மிகப் பரிசுத்தமானது. கருணாநிதியான கடவுளின் கட்டளை. இதை ஒவ்வொருவரும் ஒவ்வொரு ஜாதியும் கைக்கொள்ளவேண்டும். ஸ்வதந்திர மடைவதற்கு இது ஓர் பெரிய ஸாதனம். நாட்டின் ஸ்வதந்திரத்தை நிலை நிறுத்திக்

காத்துவருவதற்கு ஸஹோதரத்வமே சிறந்த வழியாகும். ஸஹோதரத்வமே ஒரு ஜாதியை துக்கமடையாமலிருக்கும்படிச்செய்விக்கும். ஸஹோதரத்வமே ஸந்தோஷ ஹேதுவாம் ஜனசமூகமும் இதை ஆதரிக்கவேண்டியது கடமையாகும். அதி நலம்பெற இதுவேவழி.

ஸஹோதரத்வம் ஒவ்வொரு குடும்பவிஷயத்திலும் எவ்வளவு சரியோ அவ்வளவு ஒவ்வொரு ஜாதியின் விஷயத்தில் சரியானதே. ஒரே தாய் வயிற்றில் பிறந்தவர்கள் எப்படி எவ்வித ஆச்சரியமுமின்றி ஒற்றுமையாய்க் கலந்திருந்துகொண்டு தங்களின் வீட்டுக் காரியங்களைத் தலைக்குக் கொஞ்சமாய்க் கவனித்து சம்சார சக்கரத்தை ஸுலபமாய் நடத்திக்கொண்டு போவார்களோ, அதேமாதிரியாய் ஒரு தேசத்தவர்கள் தங்களுக்குள் ஒற்றுமையுடன் ஸஹோதர வாஞ்சை பாராட்டி நடந்துவந்தால் அந்த தேசம் அடையும் நன்மைகள் எண்ணிறந்தன. அந்தத் தேசத்தில் ஒவ்வொரு மனிதனும் தன் கடமை இன்னதென்பதை நன்கறிந்து நடப்பான். ஒவ்வொருவனும் மற்ற ஒவ்வொருவனையும் ஸஹோதரனாகக் கருதி நடத்தினால் அக்கிரமச் செயல்களுக்கு இடமே கிடையாது.

ஸஹோதரத்வந்தான் ஸமத்வத்தைப் பூர்த்தி செய்விக்கும் புனித முறை. ஸஹோதரத்வம் விளங்கும் தேசமே ஸ்வர்க்க உலகம். ஸர்வாநந்தமயமான புண்யபூமி கடவுள் அந்நாட்டில் தான் திருக்கோயில் கொண்டெழுந்தருளியிருந்துத் தொண்டர்களின் அபீஷ்டத்தைப் பூர்த்திசெய்விப்பார்.

ஸஹோதரத்வமே எய்தற்கரிய மேன்மை, அதுவே ஜாதீய ஜன ஸமூகத்தின் அஸ்திவாரக்கல். ஜன ஐக்கியத்தின் அழியாக் கோட்டை. அன்பின் அருமையான வடிவம். ஸர்வோத்மமானது.

உலகத்தில் முக்கியமாய் நம்மவர்க்குள் மதமே பிரதானமானது. இத்தகைய மதத்தில் ஸஹோதரத்வம், ஸமத்வம், ஸ்வதந்திரம் முதலிய ஜனசமூக தத்துவங்களை நுழைத்து உலகின் தன்மைக்காகவே ஏற்பாடுசெய்து வைக்கப்பட்டிருக்கின்றன. உலகத்திலுள்ள ஒவ்வொருமதமும் அந்த ஸஹோதரத்வத்தையே போதிக்கின்றது.

ஸ்வதந்திரமடைய தேசத்தவர்களுள் ஸமத்வம் வேண்டும். ஸமத்வம் பாராட்டி நாட்டினரை நடத்திவர ஸஹோதரத்வம் வேண்டும். ஸஹோதரத்வம் ஸம்பூரணமாய் இருந்தால்தான் ஸ்வஜனாபிமானம் உண்டாகும். ஜனாபிமான முண்டானால்தான் தேசபக்தி தழைத்தோங்கி வளரும். தேசபக்தி வளர்ந்தால்தான் நாட்டினர் நலம் பெறுவர். அப்பொழுது தான் நாடு செழித்தோங்கும். நாட்டின் பெயர் உலகத்திற் கெல்லாம் ஒரு கண்ணியமான பெயராயிருக்கும். அப்படியிருந்தால்தான் அந்தத் தேசத்தினர்களிடத்தில்

வெளிநாடுகளில் எங்கு சென்றாலும் மரியாதையுண்டு; ஸந்தோஷ முண்டு; ஜனப்பரிவுண்டு; அனந்தம் சௌகரியங்களு முண்டு.

ஸகோதரத்வமானது ஒரு நாட்டில் நிலை நிறுத்தப்பட்டால் அந் நாட்டில் எல்லாம் கிரமமாக நடைபெறும். ஜனங்களுக்கு சந்தோஷ கரமான சர்வாநுகூலங்களும் விளையும். இவ்விதமே நாடுகளுக்கு நாடுகளும் ஸஹோதரத்வம் பாராட்டத் தொடங்கினல், உலகத்தின் போர்க்கப்பல்கள், யுத்தக் கருவிகள் முதலான ராணுவப் படைக் கலங்களுக்கு வேலையே யில்லை. அவனவன் தன் கிரமமான அள வுக்குள் எல்லைக்குள் இருந்து கொண்டு உலகத்தில் சந்தோஷமாகத் தனது வாழ்நாளைக் கழித்து ஸுகமாய் வாழ்ந்து வருவான். நியாய ஸ்தலங்களுக்கும் சிறைச்சாலைகளுக்கும் காவல் கிடங்குகளுக்கும் நாட்டில் வேலையே யில்லை.

ஸஹோதரத்வம் விளங்கும் நாடே ஸகலபோக பாக்கியங்களும் நிறைந்த இந்திர லோகம். அந்நாட்டு ஜனங்களே தேவர்கள். ஸகோதரத்வம் உள்ள நாட்டில் ஜனங்கள் பூரண ஸந்தோஷ சித்தர் களாய் இருப்பார்கள். நாட்டின் நலம் பெருகும். நன்மைகள் பல நடைபெறும். ஒவ்வொருவனும் தன் தன் கடமை இன்னதென்றும் அயலானிடத்தில் தான் நடந்துகொள்ள வேண்டிய கடமை இன்ன விதமென்றும் நன்கறிந்து நடந்துவருவான். தேசத்திற்கு ஒரு அபாயம் வருங்காலத்தில் அவனவன் தன் தன் சொந்த ரக்ஷணைக்கா கவும் ஒன்று சேர்ந்து அந்த அபாயத்தைத் தொலைத்துத் தேசத் தைக் காப்பாற்றலாம். ஸ்திரீகளின் கற்பும் ஜனங்களின் நியாயமும் யாதொரு ஆபத்துமின்றி நன்றாய்ப் பாதுகாக்கப்பட்டுவரும் பஞ்சத் தாலும், பசிப்பிணியாலும் வருந்தி, அகாலமரணத்திற்கு ஆளாகாமல் பூரண சந்தோஷத்துடன் தேஜஸ்விகளாய் விளங்குவார்கள். அத் தகைய ஜனசமூகத்தில் தெய்வத்தன்மை குடிகொண்டிருக்கும் ஜனங்களிடத்தில் சகல சத்குணங்களும் பிரகாசிக்கும் என்பது உல கறிந்த உண்மை.

நெருப்பைத் துரும்புகள் அணுகாது. நிறை நெஞ்சுடையவ னைத் தரித்திரம் நெருங்காது. முன்னெச்சரிக்கை யுள்ளவனை மீசை முறுக்கும் வஞ்சகன் ஏமாற்ற இயலாது. பரிசுத்தாத்மாவைப் பாவங் கள் சூழாது, பலமுள்ளவனிடத்துத் துஷ்டர்கள் சமீபிக்கார்கள். அதுபோல் சகோதரத்வ முள்ள ஜாதியினிடத்து எந்தத் துஷ்டனும் சகுனியும் அருகே வரான் எனவே ஒவ்வொரு ஜாதியின் ஜனசமூக மும் கைக்கொண்டு அனுஷ்டிக்கவேண்டியது தெய்வீகமான இந்த சகோதரத்வமே. சகோதரத்வந்தான் ஜனசமூகத்தின் ஸுகஸ்தா பனம்.

நா—மி—ன்.

"ஆறுவது சினம்"—இருவர் கருத்து.

[குறிப்பு.—"ஆறுவது சினம்" என்னும் வியாசத்தை இரு நண்பர்கள் எழுதியனுப்பி இம்மதியில் பிரசுரிக்கக் கோரினமையினல் 'எப்பொருள் யார்யார் வாய்க்கேட்பினும், அப்பொருள் மெய்ப்பொருள் காண்பது அறிவு' என்னும் ஆன்றோர் மொழியை வாசகர்கள் கவனிக்கவேண்டி இவண் ஒரே வாக்கியத்தின் இருவர் வியாசமும் பிரசுரிக்கப்பட்டது.—V. R. G., ஆசிரியர்.]

I

'ஆறுவது சினம்' என்று இப்பூவுலகில் மானிடராய்ப் பிறந்த நாமெல்லோரும் அறிந்தொழுகிப் பொதுவாகப் பெறற்குரிய புகழை யடைய நல்லிசைப் புலவராகிய ஔவையார் சுருங்க வைத்து விளங்கக் காட்டி யுள்ளார். அதாவது 'அறவது (முழுவதும் நீங்கிப் போவது) சினம்' என்று கூறுமல் 'ஆறுவது (தணியத்தக்கது) சினம்' என்று கூறியிருக்கின்றனர். சினம் என்றுல் கோபம். கோபம் என்பது பிறர் நம்மிலும் மிக்கவராக யிருப்பினும், நமக்கு சமமானவர்களாயிருப்பினும் நம்மிலும் இளையவர்களா யிருப்பினும், ஏதேனும் ஒரு காரியததைச் செய்தவிடத்து அது நம்முடைய மனதுக்கு ஒவ்வாவிடினும், நமக்கு தீங்கை விளைவிக்கினும் மொழிகளினலாவது செய்கைகளினலாவது நமக்கு அறுவறுப்பான உணர்ச்சியை உண்டாக்குங் காலத்து, உடனே அன்னவரை திட்டவாகிலும், அடிக்கவாகிலும், வேறொரு தீங்கை செய்யவாகிலும் மனநிலை எழுகின்றது. அந்நிலைக்குத்தான் 'கோபம்' என்று பெயர்.

ஒவ்வொருவருக்கும் கோபம் என்பது இயல்பில் உதிக்கத்தக்கதோர் குணம். இத் தீயகுணத்தை முழுவதும் போக்குவது அசாத்தியமாயினும் ஒவ்வொருவரும் அதை தன்னுடையபுத்தியினல் அடக்குதல் கூடும். அவ்வாறு அடக்காது அத்தீயகுணத்தை வரைவிடுவோமாயின் அதனல் பெருங்கெடுதிகள் நமக்கும், நம்மைச்சேர்ந்தவர்கட்கும் உண்டாகும். நம்மைச் சூழ்ந்திருப்பவர்கள் தத்தம் மனதுக்கிசைந்தவாறு பற்பல காரியங்களை செய்யும்போது அபிப்பிராய பேதத்தினல் நம்மனதுக்கு அவை ஒவ்வாவிடத்து நம்மிடத்தில் கோபம் உண்டாகும். அதை அடக்க முயலவேண்டியது நம்முடைய கடமை. இதை யுத்தேசித்துதான் ஔவைப் பிராட்டியாரும் 'முன் கோபக்காரரோ டிணங்க வேண்டாம்' என்று கூறி யிருக்கின்றனர். யோசித்துப் பார்க்குமளவில் மனிதனுடைய மனோதத்துவ லக்ஷணத்திற்கு சினம் இயற்கையானகுணம் என்றும் அதை அறவே அகற்றுவது எப்படிப்பட்டவர்க்கும் அசாத்தியமென்றும் அதை ஒவ்வொருவரும் தன்னுடைய அறிவினலும் மனோதிடத்தினலும் தணிக்கவேண்

டியது அத்தியாவசிய மென்றும், அறிவிக்கவே ஔவைப் பிராட்டி யார் 'ஆறுவது சினம்' என்று கட்டளை யிட்டதாகத் தெரியவருகின்றது. கோபம் இயற்கையாகவே அமைந்துள்ளது என்பதற்கு ஒரு திருஷ்டாந்தம் கூறுவோம்.

ஓர் ஊரில் சகல சாஸ்திரங்களையுமறிந்த ஒருபெரியவர் இருந்தார். அவருக்கு யார் என்ன சொன்னபோதிலும் கோபம் வருகிறதேயில்லை. இதனால் அவருக்கு கோபமே வருகிறதில்லை என்ற பேர் எங்கும் வழங்கலாயிற்று. இதைக்கேள்வியுற்ற அகசியக்காரன் ஒருவன் அவரிடம் சென்று, 'சுவாமி! தங்களுக்குக் கோபம் வருகிறதே யில்லையா ?' என்றான். அதற்கு அப்பெரியவர் அகசியக்காரனை நோக்கி, அதிசாந்தமாய், ' அப்பா ! எப்போதும் எனக்குக் கோபம் வராது ' என்றார். மறுபடியும் அப்படியே கேட்டான். அதற்கு அவர் முன் சொன்ன மாதிரியே விடையளித்தார். அகசியக்காரன் மீண்டும் மீண்டும் இருபது முப்பது தடவை அதே கேள்வியைத் திருப்பித் திருப்பி மூச்சுவிடாமல் கேட்டுக்கொண்டே யிருந்தான். அப்போது, பெரியோர் 'சீ, சீ, நீ என்ன மதியீனனா யிருக்கின்றாய். நான் எத்தனை தடவை உனக்கு உத்தரவு சொல்லுகிறது, போ' என்று முகங்கடுத்துக் கூறினர். இதைக் கண்டமாத்திரத்தில் அகசியக்காரன், 'சுவாமி! இதோ தங்கட்குக் கோபம் உண்டாகிவிட்டதே. தங்களுக்கு எப்போதும் கோபம்வராது என்பது வீண்விருதுதானே' என்று பரிகாசம் செய்துக்கொண்டே போய்விட்டான். ஆகையால் கோபம் என்பது எப்படிப்பட்டவருக்கும் தம்மையறியாமலே வாதிக்கும். காமக்குரோதாதிகளை யறவே விட்டொழித்த துறவிகட்கும் ஒவ்வொரு காலத்தில் கோபம் உண்டாதலியற்கை. சிலர் ஏதாவது காரணத்தைப்பற்றிப் பிறரிடத்தில் கோபம் உண்டாயின் அதை நெடுநாள் வரையில் பாராட்டுகிறார்கள். உத்தமர்கள் அவ்விதம் பாராட்டமாட்டார்கள். இதனை ஔவைப்பிராட்டியாரும் தமது வாக்குண்டாம் என்னும் நூலில்,

" கற்பிளவோ டொப்பர் கயவர் கடுஞ்சினத்துப்
பொற்பிளவோ டொப்பர் போல்வாரே—விற்பிடித்து
நீர்கிழிய வெய்த வடுப்போல மாறுமே
சீரொழுகு சான்றோர் சினம்''

என அருமையாக எடுத்துக் கூறியிருக்கின்றனர்.

கோபம் பெரும்பாலும் மனோதிட்மற்றவனுக்கும் அகங்காரிக்குமே உண்டாகும். பாலியர்கட்கும் வயோதிகர்கட்கும் சொற்ப விஷயங்களில் காரணமாக கோபம் உண்டாகும். கோபத்தால் விளையுந் தீமைகள் பல என்பதைப்பற்றி ஒரு திருஷ்டாந்தம் கூறுவோம்.

ஓர் ஊரில் ஏழ்மையான குடியானவன் ஒருவ னிருந்தான். அவன் வெகு நாளாய் நாய் ஒன்றை அருமையாக வளர்த்து வந்தான். அந்த நாயின் அழகையும் அதன்குணத்தையும் கண்ணுற்று வந்த பணக்காரனொருவன் அதை எவ்விதத்திலாவது தான் அடையவேண்டு மென்று எண்ணங்கொண்டிருந்தான். இதைக் கேள்விபட்ட அந்த ஏழை குடியானவன் தனக்குக் கொஞ்சபணம் தேவையா யிருந்த மையால் தன் நாயை அந்தப் பிரபுவுக்கு அடமானமாகக் கொடுத்து விட்டுத் தனக்குத் தேவையான சொற்ப பணத்தைப் பெற்றுக் கொண்டான். சிறிது நாட்கள்கழிந்து அந்தப் பணக்காரன் ஏதோ ஒரு காரியார்த்தமாக நருக்கு ஒன்றை எழுதி அதைத் தன் நாயின் பட்டையில் கட்டி அந்த நாயின் பழைய எஜமானனாகிய ஏழைக்குடி யானவனிடம் செல்லும்படியாக ஏவினான். அந்த நாய் ஓடி அன்ன வனிடம் நின்றது. அந்த நாயைக் கண்டமாத்திரத்தில் அவன் 'நான் உன்னை அங்கு இருக்கும்படியா யனுப்பியிருக்க, நீ எப்படிவந்தாய்?' என்று அதிக கோபத்துடன் அங்கிருந்த தடியால் ஓங்கி வேகமாக அடித்தான். அந்த அடி நாயின் மண்டையில் பலமாய்ப் பட்டதினால் நாய் சுருட்டிக்கொண்டு கீழே விழுந்திறந்தது. இறக்கவும் போய்ப் பார்க்க நாயின் கழுத்தில் ஒரு நருக்கு ஒன்றிருந்தது. அந்த நருக் கை எடுத்து வாசித்து சங்கதியறியவும் தன் நாய் இதற்காக வன்றோ வந்தது என்று மனம் நொந்து வாடினான்.

கோபத்தால் விளையுந் தீமைகள் பல என்பதை ஆன்றோர் பல வாறாகக் கூறியிருக்கின்றனர். இதை,

> 'கோபமே பிறவியைக் கொடுக்குங் கொள்கையாம்
> கோபமே யறிவினைக் குறைக்குங் குட்டநோய்
> கோபமே தாயைக் கொல்லுந் தின்படை
> கோபமே தவத்தினைக் குலைக்கும் பேயரோ.'

என்னும் செய்யுளால் காணலாம்.

ஒருவர் தன்னினும் மிகப்பெரியோரிடத்துக் கோபங்கொண்டால் மலையைத்தாக்கிய கோலைப்போல் தான் அழிந்து அவமானமடை வான். தனக்கு சமமானவரிடத்தில் கோபங்கொண்டு அன்னவருக்கு தீங்கு செய்தால், அவர்கள் தனக்குத் திருப்பிச்செய்யும் தீங்குகளால் வருந்துவர் தனக்கு தாழ்ந்தவர்களிடத்திலே செலுத்தின் அது தவறாமற் கேட்டைவிளைவிக்கும். ஆதலின் அவர்களிடத்திற் செலுத் தாமற் காப்பதே பொறையுடைமையாம். இதனைச்

> 'சொல்லிடத்துக் காப்பான் சினங்காப்பான்
> அல்லிடத்து காக்கிலென் காவாக் காலென்'

எனவும், 'எல்லா மொறுக்கும் மதுகை யுரனுடையானன்,
பொறுக்கும் பொறையே பொறை'

எனவும், மேலோர் கூறியிருக்கின்றனர்.

இவ்வளவு தீமை பயப்பதான குணத்தை எல்லாம் வல்ல இறைவன் மனிதனிடத்தில் ஏன் உண்டு பண்ணவேண்டும்? என்னுங் கேள்வி ஒவ்வொருவரிடத்தும் ஓரோர் காலத்தில் நிகழக்கூடுமென்றோ? ஒரு மனிதனிடத்து கோபம் முற்றுமே இல்லையென வைத்துக்கொள்வோம். அவன் தன்னுடைய அருமைப்புதல்வன் தீயகாரியங்களைச் செய்யக்காணின், உடனே அவனை தண்டித்து நல்வழிப்படுத்தவேண்டியது தந்தையினது கடமை. அவனைத் தண்டிப்பதற்குச் சிறிது சினம்வேண்டும். தந்தையினிடத்தில் சினம் முற்றுமே இல்லையாயின் அப்புதல்வனைத் தண்டிக்க மனம் எழுதல் அரிது. இத்தகைய சினத்தைத்தான் பெரியோர்கள் 'மறக்கருணை' என்பார்கள்.

இவைகளை எல்லாம் நன்குக யோசிக்குமிடத்து முற்றத் துறந்த முனிவர்களிடத்தும் சினம் இல்லாமற் போகாதென்பதும், அதைத் தம்மாலியன்ற அளவு எழவொட்டாமல் தணித்துக்கொண்டு வருவது தான் உத்தம புருடர்களுடைய குணம் என்பதும் புலப்படுகின்றது.

சா. ரு. சொக்கலிங்கம்பிள்ளை, பொருள்வைத்தசேரி, சிக்கல்.

II

"ஆறுவது சினம்'' என்பது பெண்மணியாகிய ஔவையார் திருவாக்கு 'கோபம் பாவமறியாது', 'தீராக்கோபம் போராய் முடியும்' என்பவை முதலான முன்னோர் முதுமொழிகள். இவ்வுலகின்கண் கோபத்தினால் விளைந்த தீமைகள் இவ்வளவென்று ஒருவராலும் அளவிடுதல் கூடாது. கோபத்தினு லுண்டான மரணங்கள் எத்தனையென்று யாரால் சொல்லக்கூடும். ஆகையால்தான் நமது கல்விச் செல்வியார் கோபம் ஆற்றப்படவேண்டியது என்றெடுத்துரைத்தார்.

ஒருவன் நமக்கு தீங்கு செய்யும்போதும் நம்மைத் திட்டும் போதும் நமக்கு கோபம் வருகிறது. அக்கோபம் நமக்கு சுபாவம். தக்க காரணமுளதாயின் நாம் கோபங்கொள்ளவேண்டியது நியாயம் தான். ஆயினும் அது எல்லைகடந்து மற்றோருக்கு தீமை விளைவிக்காதபடி ஜாக்கிரதையாக இருக்கவேண்டும்.

நமது வாழ்நாளில் நமக்குக் கோபத்தையும் விசனத்தையும் விளைவிக்கத்தக்க அனேக காரியங்கள் நாடோறும் நேரும். அவை ஒவ்வொன்றையும் பார்த்து நாம் கோபித்துக்கொண்டே இருப்போமானால் மிகுந்த நிர்பாக்கியராயும் பிறர்க்கு சங்கடத்தை உண்டுபண்ணுகிறவர்களாயும் இருப்போம். ஒருவன் நமக்கு தீங்குசெய்வானாகில் அதை உடனே மன்னிக்கவேண்டும். இது புத்திமான்களுக்குரிய மிகவும் மேலான குணம். கோபியாமல் மன்னிக்கும் குணம் சத்துருவையும் மித்ருவாக்கும்.

சூரியவம்சத்தில் அம்பரீஷர் என்ற சக்கரவர்த்தி ஒருவர் இருந்தார். அவர் தமது ராஜ்பத்தை நீதிதவறாது ஆண்டுவந்ததோடு இவ்வுலக விஷயங்கள் அநித்யம் என்றுணர்ந்து பகவத் தியானத்திலும் மனதை செலுத்திவந்தார். அவர் மகாவிஷ்ணுவையே தமது இஷ்ட தேவதையாகப் பாவித்து வந்தார். அவர் துவாதசியில் நேரிட்ட அதிதிகளுக்கு அன்னமளித்துவிட்டு பிறகு தான் பாரணை செய்வதாகத் தீர்மானித்து அதுபோல் வெகுகாலம் நடந்து வந்தார். ஒரு துவாதசி தினத்தில் அவர் போஜனம்செய்யும் தருணத்தில் தூர்வாச மஹரிஷி அவரிடம் வந்தார். அம்பரீஷர் அவரை போசனத்திற்கு வரும்படி அழைத்தார். உடனே அவர் யமுனா நதிக்கு ஸ்நானம் செய்யச் சென்றார். அவர் வருவதற்கு வெகு நேரமானபடியால் பாரணை வேளை முடியுங்காலம் வந்துவிட்டது. அகாலமாகிவிட்டதே விரதம் தவறிவிடுமே என்று நினைத்து தருமசங்கடத்தில் அகப்பட்டுக் கொண்டு வருந்தும் அம்பரீஷரை நோக்கி, பிராமணர்கள் பகவானுடைய அபிஷேக தீர்த்தத்தை யிப்பொழுதே "ஆசமனீயம்" செய்துவிட்டால் துவாதசியில் பாரணை செய்த பலன் வரும். அதிதிக்கு முன் சாப்பிட்ட பாபம் வராது. இவ்வாறு செய்வதே நலம் என்று தர்மத்தை யெடுத்துரைத்தனர். அரசனும் அவ்வாறே செய்தான்.

ரிஷி யமுனையிலிருந்து வந்து அரசன் ஆசமனீயம் செய்ததை யறிந்து நமக்கு முன் அரசன் புசித்துவிட்டான் என்று கோபித்துக் கொண்டார். மென்மேலும் அவருக்குக் கோபம் அதிகரிக்க அவர் தமது சடையிலிருந்து சில உரோமங்களையெடுத்து அதை ஒரு சக்ராயுதமாகச் செய்து அதை அரசனுடைய உயிரை வாங்கும்படி விடுத்தார். அம்பரீஷர் நிர்ப்பயமாக பகவான்மேல் பாரத்தைப்போட்டு தாமிருந்த யிடத்தைவிட்டு அசையாமலும் ஒன்றும் பேசாமலும் இருந்துவிட்டார். அந்த ஆபத்து சமயத்தில் வாசுதேவரது சுதர்சனமென்னும் சக்ரம் பக்தனான அம்பரீஷனைக்காக்க ஆகாயத்தினின்றும் இறங்கி தூர்வாஸருடைய சக்கரத்தை எரித்துவிட்டு அவரையும் துரத்தத் தொடங்கிற்று.

அவர் பயந்தோடி அநேக தேவர்களிடத்தும் சென்று சரணம் அடைந்தார். எல்லோரும் தம்மால் முடியாதென்று அவரை நிராகரித்து விட்டார்கள். எங்கு சென்றாலும் சக்கரமோ அவரைப்பின் தொடர்ந்து நடைசியாய் தூர்வாஸமஹா விஷ்ணுவையே சரணம் அடைந்தார். அப்பொழுது அவர் நானோ எனது அடியார்களில் அடங்கினவன். அவர்களில் ஒருவனைக் காக்க இச்சக்ரம் புறப்பட்டது. இதை யென்னால் தடுக்கமுடியாது. உமக்கு அம்பரீஷனைத் தவிர வேறு கதி கிடையாது. அவனிடம் போம் என்று ஆக்ஞாபித்தார். ரிஷி மிகுந்த வெட்கத்துடன் அம்பரீஷரிடம் வந்து சரணம் அடைய அவர் மிகுந்த பெருந்தன்மையுடன் ரிஷிக்கு அபயமளித்து

சுதர்சன சக்கரத்துக்கு வேண்டிய வந்தனை வழிபாடுகள் செய்து ரிஷியை ஒன்றுஞ் செய்யாது திருமபிவிடவேண்டும் என்று கேட்டுக் கொண்டார். உடனே சுதர்சன சக்ரம் பகவானிடம் சென்றது. துர்வாஸரும் அபாயம் நீங்கியதைக்கண்டு ஒருவாறு தேறினர். (கோபம் பெருங்கேடு விளைவிக்கும்).

கோபத்தைத் தடுப்பதற்கு நாம் பொறுமை, இனியவை கூறல், இரக்கம் முதலிய சிறந்த குணங்களைக் கையாளவேண்டும். இக்குணங்கள் நம்மிடத்து அமையுமாறு விடலனைப் பிரார்த்திப்போமாக.

அ. ராமச்சந்திரன், ஆம்பூர்.

—*—

கற்பு.

இப்பூவுலகத்தில் பரமபுருஷனல் சிருஷ்டிக்கப்பட்ட ஜீவராசிகளில் மானிடரே மேலானவர் என்பது சகலரும் அறிந்த விஷயம். மானிடராகிய நாம் பரமபுருஷனுக்குப் பிரீதியுடன் நடந்தால் நமக்கு இறுதியில் மோக்ஷம் கிடைக்கும் என்பது சகலரும் அறிந்த விஷயம். மானிடராகிய நாம பரமபுருஷனுக்குப் பிரீதியுடன நடந்தால் நமக்கு இறுதியில் மோக்ஷம் கிடைக்கும் என்பது திண்ணம். இம்மானிடப் பிறவியிலேயே நாம நற்காரியங்களைச் செய்து மோக்ஷத்தை யடையாவிடில் வேறு ஜன்மஙகளில் மோக்ஷமடைய முடியாது. கடவுளிடத்தில் பக்தியாயிருந்தால் மாத்திரம் போதாது. எப்படி நோய்க்காரன் மருந்து சாப்பிடுவது மல்லாமல், அத்துடன் பத்தியங்களுமிருந்து நோயைப் போக்கிக் கொள்ளுகிறானோ, அதுபோல் நல்லொழுக்கங்களு மிருக்கவேண்டும். ஒவ்வொரு ஆண், பெண்களுக்கும் இருக்கவேண்டிய நல்லொழுக்கமானது கற்பு. கற்புடைய மங்கையர்களுக்கு அச்சம், நாணம், மடம், பயிர்ப்பு என்னும் நான்கு குணங்களும் இருக்கவேண்டுவது அவசியம். அவையாவன;

(1) அச்சம்—அன்பு காரணமாகக்கொண்ட பயம்.

(2) நாணம்—கணவனிடத்து விருப்பக் குறிப்பு தோன்றிய போது உண்டாகும உள்ளத்தி னொடுக்கம்.

(3) மடம்—அன்புடையார் கூறுவதைக் கேட்டும் தான் முன் கொண்ட கருத்தை விடாமை.

(4) பயிர்ப்பு—முன் கண்டறியாதவற்றைக் கண்டபோது மனம் பொருந்தாத கூச்சம்.

உதாரணம்—'நாற்குணமு நாற்படையா வைம்புலனு நல்லமைச்சா
வார்க்குஞ் சிலம்பேயணி முரசா—வேற்படையும்
வாளுமே கண்ணா வதனமதிக் குடைக்கீழ்
ஆளுமே பெண்மை யரசு.'

ஒரு ராஜாங்கத்திற்கு இரத, கஜ, துரக, பதாதிகள் என்னும் நான்கு வகைச் சேனைகளிருப்பதுபோல கற்புடையவர்களுக்கு மேற்கண்ட அச்சம், மடம், நாணம், பயிர்ப்பு என்ற குணங்கள் இருக்க வேண்டும். அமைச்சருக்குப் பதிலாக மெய், வாய், கண், மூக்கு, செவி என்ற ஐம்புலன்களிருக்கின்றன. ராஜன், நல்லவனாயிருக்க வேண்டுமானால் மந்திரிகளும் நல்லவர்களாயிருக்க வேண்டும். அது போல் பெண்கள் கற்புடையவர்களா யிருக்கவேண்டுமானால் இந்த ஐம்பொறிகளையும் அடக்கியாளுபவர்களா யிருக்கவேண்டும். இன்னும் கற்புள்ளவர்களிடத்தில் 1. தேக வருத்தம், 2 சோம்பல், 3. தூக்கம், 4 இணைப்பு, 5 ஆயாசம், 6. இன்பம், 7. துன்பம், இவ்வேழு குணங்கள் இல்லாதவர்களா யிருக்கவேண்டும்.

ஸ்ரீ சரஸ்வதி விலாச தமிழ்ச் சங்கம், சின்னவரிக்கம்.

—*—

மாந்தரைக் கெடுப்பது மதுவே.

(66-ம் பக்கத் தொடர்ச்சி.)

முன்பு ஒருநாள் தேவலோகத்திற் கூடிய தேவசபையில் தேவேந்திரன் வினவிற்காக "எனது சீடன் அரிச்சந்திரன் பொய்சொல்லாத சத்தியவா" னென வதிஷ்டர் சொல்ல நேர்ந்தது. அந்நேரத்தில் அவ்விடமிருந்த விஸ்வாமித்திரருக்குப் (பழமையாகிய பகை நெஞ்சத்திருந்தமையால்) சினம் பெருகி தம்முடைய வார்த்தையை உயர்த்தும்பொருட்டு "அரிச்சந்திரன் பெரும் பொய்ய" னென்பதாக சாதிப்பாராயினர். இதைக்குறித்து அப்புண்ணிய சபையில் பெருங் கலகம் வர நேர்ந்தது வியக்கத்தக்கதே. அத்தகைய சந்தர்ப்பத்தில் நாரதரா லேவப்பட்ட முனிவர்க ளிருவரும் தத்தஞ் சபதத்தைக் கூறும்பொழுதில் வதிஷ்டர் கூறிய சபதத்திற் "கள் குடத்தைத் தலையிற் சுமந்து தெற்கு முகமாய்ப் போகப்பட்டவன் சேரத்தக்க கதியை நான் சேரக்கடவேன்" என்றல்லவோ சொல்லி யிருக்கிறார்.

சகோதரர்காள்! இதைக் கவனியுங்கள். நமது மகரிஷிச் சொல்லிய இச்சபதம் ஒவ்வொரு மனிதனுள்ளத்திலும் உறுத்தத் தக்கது. இது பஞ்சமா பாதகத்தினுங் கொடியதென்று சொல்லினும் போதாது. இந்த மதுக்குடத்தை சுமக்குந் தொழிலே கொடியதென்றால் அவற்றையே நிதசரி ஸ்ரீராம நாமமாகக்கொண்டு அருந்துபவன் சேரத்தக்க கதி என்னையோ நாமறியோம். ஆயினும் அத்தகைய காரியத்திற்கு மன்னிப்பு கிடைப்பது அரிதென்று மாத்திரம் சொல்லத் துணிந்தேன்.

இன்னும் ஸ்ரீ மகாபாரதத்தில் யாதவர்களுடைய அழிவைப்பற்றிக் கூறுமிடம் முக்கியமாய் கவனிக்கத் தக்கது. இவர்க ளெல்லோ

ரும் எவ்வளவோ அறிவாளிகளும் தெய்வபக்தி யுடையவர்களும் சாக்ஷாத் ஸ்ரீகண்ணபிரானையே அரசராகக் கொண்டவர்களுமாகிய புண்ணிய சிலர்கள். இத்தகைய சிறப்பு வாய்ந்த சற்குணவான்களுக்குள் அவ்வித கலகம் வரவேண்டுமாயின் அவர்களுடைய மூளைகள் எவ்விதம் கெட்டுப்போய் பைத்தியம் பிடித்திருக்கவேண்டும் என்பதை யோசித்துப் பாருங்கள்.

நன்றாய் மதுவை அருந்தினதினால் புத்தி சபலித்துப்போய், ஒருவர் பேசுவது இன்னொருவர் அறியாவண்ணம் வெறித்து மதிமயங்கிப் போனதினாலேயே இவர்கள் கலகமிட்டு அழிய நேர்ந்தது. ஆனால் இவர்களுடைய அழிவைப்பற்றி பேசும்பொழுது காந்தாரியம்மனுடைய சாபம் மூண்டுக்கொண்டதாலும், மகரிஷிகளின் சாபத்தால் உலக்கை யுருக்கொண்டவற்றிற்காக பயந்து அவற்றை தூளாக்கி ஆற்றோரங்கொட்டினதிலிருந்து உண்டான கோரைகளாலுமே இறந்தார்களெனவும் சாதிக்கலாகும். நாமதை மறுக்கவில்லை. ஆயினும் இச்சாபம் நேர்ந்த விடத்து, அவற்றுடன் கூடி ஒத்தாசை செய்தது மதுவே என்றுங் கூறுகிறோம்.

இந்த மதுபானம் பாவங்களுக்கு உறைவிடமென்றும், துஷ்ட செய்கைகளுக்கு வாசஸ்தலமென்றும், சுத்தமாய் அனேகரறிவதில்லை. எவ்வளவு கல்விமானயிருந்தாலும் தினம் இருகால பூஜை தவறாது புரிபவனயிருந்தாலும் இந்த மதுபானஞ் செய்யும் பழக்கத்தை ஒழிக்காதவனுடைய செய்கைகள் சுத்தமாகமாட்டா. அவனுடைய கல்வி ஞானத்தின் கரையையே கண்டிருந்தாலும், அவனுக்கு மதுகுடிக்கும் வழக்கமொன்றுமட்டுமிருந்தால் அவனை ஒருமிருகத்திற்கே ஒப்பிடலாம். நிற்க,

குடியர்களுக்கு இதில் யாதும் ருசி யிருக்கலாமோ வெனக் கவனித்தால் அவ்விதமுமில்லை. அவனந்த சாராயப் பாத்திரத்தை வாயில் வைக்கு முன்னரும், குடிக்கும்போதும், குடித்த பின்னரும் அவனுடைய முகத்தையும் தேகத்தையும் பார்த்தால் அதில் எட்டிக் கசப்பிருக்கிறதென உணரலாகும் ஒருநோயாளியினுடைய கட்டியை வைத்தியரானவர் வெட்டும்போது வருத்தம் சகிக்கமாட்டாமல் நோயாளி தனது முகத்தை எவ்வளவு கஷ்டத்துடன் சுளிக்கிறானே அதனினும் பதின்மடங்கு அதிக வருத்தமுள்ளவன் போன்று சுளிக்கிறான். தேகத்தைப் பார்த்தால், நடுக்காட்டில் புலியைக்கண்டு கையிலும் ஆயுதமில்லாவிட்டால் ஒருமனிதனுடைய தேகம் எவ்வளவு நடுக்குறுமோ அதனினுங் கோரமாயிருக்கக் காணலாம். (தொடரும்.)

பி. எஸ். வரதராஜு,

மாபிடிகாமம், இலங்கை.

பெண்கல்வி.

கற்கை நன்றே, கற்கை நன்றே,
பிச்சைபுகினுங் கற்கை நன்றே.

சகோதர சகோதரிகளே!

இப்பூவுலகின்கண் எண்ணிறந்த ஜீவகோடிகளுள், மானிடராய்ப் பிறப்பதரிது. அப்படி மானிடராய்ப் பிறந்த நம்மில் கூன், குருடு, செவிடு, ஊமை, நொண்டி நீங்கிப் பிறப்பதரிது. அப்படி அவயவக் குறைவின்றி பிறந்த காலையில் நமக்கு அறிவையூட்டி இன்பசாகரத்தில் மூழ்க ஏதுவான கல்வியைக் கற்காவிடில் நமக்கு இருநேத்திரங்களிருந்தும் யாதுபயன்?

"எண்ணென்ப வேனை யெழுத்தென்ப விவ்விரண்டுங்
கண்ணென்ப வாழு முயிர்க்கு."

"கண்ணுடைய ரென்பவர் கற்றோர் முகத்திரண்டு
புண்ணுடையர் கல்லாதவர்"—என்று கூறியுள்ளார்.

ஆண்மக்கள் கல்வி கற்பதுபோல பெண்களும் கல்வி கற்கவேண்டியது அவசியம். ஏனென்றால் ஒரு புருஷனுக்குப் பெண்டீரானவள், பெண்டீர், இல்லாள், மனைவி, என்ற பெயர் அவளுக்கிருப்பதனால் வீட்டுக்காரியாதிகளைச் சரிவர நடத்தக் கூடியவளென்று உணர்கிறோம்.

தன் கணவனைத் தெய்வம்போல்கருதி தன் கணவன் சொல்லைத் தவறாது நடத்தல், கற்புநிலைமையைக்காத்தல், தன் மாமி மாமன் மார்களோடு கடுஞ்சொல் உரையாது தன் பெற்றோர்களைப்போல் கருதுதல், கணவனின் வரவிற்குத்தக்க செலவு செய்தல, அறுசுவையுடன் உண்டி சமைத்தல், தன்கணவனுடன் போராடாது ஒற்றுமையுடன் வாழ்தல், குடும்பத்தில் எவ்வளவு கஷ்டங்கள் ஏற்பட்டாலும் பொருமையுடன் களித்தல் தன்மக்களை தீயவழியினின்று நல்வழியில் நடத்துதல், இககாரியங்களுக்கு இல்லாளானவள் கல்வி கற்காவிடின் எவ்விதம் நடக்கும்? தாறுமாறாகவிருக்கு மென்பதில் ஐயமில்லை.

ஆனதால் நம் சிறுமிகளை பள்ளிக்கனுப்பி அகஸ்தியர் அருளிய ஹரிச்சுவடியைத் தலைப்பாகக் கொண்டு இல்லறத்திற்கு வேண்டிய கல்வியைப் படிப்பிக்கச் செய்யவேண்டும், கல்வி கற்பதில் புண்ணியவதிகளின் நாவல்கள், குறள், நாலடியார், சுகாதாரம், பாகசாஸ்திரம் முதலிய அரிய விஷயங்களை கற்பிக்கவேண்டுமேயொழிய, அகலிகைபால் இந்திரன் சபிக்கப்பட்டான், ராவணன் சீதையை சிறை எடுத்துச் சென்றான், என்ற கதைகளைப் படிப்பிக்கச் செய்யாமல் கற்புநிலைமையைக் காக்க வழியுள்ளதைக் கற்பிக்கவேண்டும்.

சிலர், பெண்கல்வி அவசியமில்லை என்று கூறுகின்றனர். ஆனால் முன்காலத்தில் ஒளவையார் ஒரு பெண்மாது தகுந்த சாஸ்திரங்களை படித்து அதனால் பயனடைந்ததை தற்சமயம் நினைப்பூட்டுகிறோம். ஆனதால் ஆண்மக்கள் பயிலவேண்டியதைப் பயில்விக்காமல், இல்லறத்திற்கு வேண்டியவற்றைப் பயில்விக்கவேண்டும்.

"தொட்டனைத் தூறுமணற்கேணி மாந்தற்குக்
கற்றனைத் தூறு மறிவு"—என்று ஆன்றோர் கூறியபடி கல்வி கற்காவிடின் பெண்டிர் புருஷனுக்கு எவ்விதம் மந்திரியாவர்.

ஆனதால் எனது சகோதர சகோதரிகளே! நம் வீட்டிலுள்ள ஒவ்வொரு சிறுமிகளையும் இல்லறத்திற்கு வேண்டிய காரியங்களைப் பயில்விக்கும்படி செய்யக் கேட்டுக்கொண்டிருக்கிறேன்.

A. S. T. மஹாராஜ், யூனியன் போர்டு ஆபீஸ், சுரண்டை.

சங்குபாலகன்.

(184-ம் பக்கத் தொடர்ச்சி)

வண்ணாத்திவீட்டில் வேலைசெய்தல்.

பிள்ளைகள் சங்குபாலகன் சொன்ன வார்த்தைக்கிணங்கி அவனை ஓர் பக்கத்தில் தனியாய்நிறுத்தித் தாங்களனைவரும் எதிர்ப்பக்கத்தில் நின்று பந்தாடினார்கள். வெகுநேரம் விளையாடியும் சங்குபாலகன் ஒருதரமாவது தோற்றானில்லை. அப்பிள்ளைகள் வியப்புற்று இவனோடு விளையாடமுடியாதெனக் களைப்புடன் ஓடிவிட்டனர். பொழுதிறங்கும் வேளையாயிற்று. ஒரு வண்ணாத்தி தன்கழுதைகளை மேய்ப்பித்து வீட்டுக்கு ஓட்டிச் சென்றுகொண்டிருந்தாள். அச்சமயத்தில இவன் அவளெதிர்ப்பட அவள் இவனைக் கண்டவுடன் யாரோ ஒரு வயிற்றுக்கில்லாத ஏழையென இவனுடைய உடையினாலறிந்து இவனை நம் வீட்டுக் கழைத்துச்சென்று நம் கழுதைகளை மேய்க்கச் சொல்லி நாள்தோறும் சிறிது கஞ்சியை வார்த்து வருவோமென்றுன்னி, "அப்பா! உன்னைப் பார்க்கும்பொழுது மிக்க ஏழைப் பிள்ளையைப்போல் தோற்றுகிறது. உனக்கு நாள்தோறும் உணவு அளித்துவருகிறேன். என் கழுதைகளை மேய்ப்பித்து வரமுடியுமா? உன் விருப்பம் எப்படி எனக் கேட்டாள். இவன் சரியென அவள் சொல்லுக்கிணங்கி அவளுடன் சென்றான். ஆனால் அவன் தனக்கு உணவில்லையென அங்கு செல்லவில்லை. தான் எவ்விதமும் தன் தந்தையினிடம் போய்ச்சேருதற்கு வழி தேடுதற்கே அங்கு சென்றான். வண்ணாத்தி அவனை அன்றிரவு குப்பைமேட்டி லிருத்திப் புளித்த காடிக் கஞ்சித்தண்ணீரை ஒரு ஓட்டில் ஊற்றி அதை அருந்தும்படி

கூறினுள். சங்குபாலகன் இவள் குணம் இப்படியாவென அறிந்து அவள் மறைந்தவுடன் அக்காடி நீரைக் குப்பைமேட்டிலேயே ஊற்றி விட்டு அம்மா உறக்கம் வருகிறதென்ருன் அவள் கழுதைப்பட்டியில் ஓரிடத்தில் படுத்துக்கொள்ளும்படி கூறினுள். பிறகு கழுதைப் பட்டிக்குவந்து ஒருவருக்கும் தெரியாமல் சிவாலயத்திற்குச் சென்று அங்கு பூசை முடித்துக்கொண்டு உணவுண்டு மாபோகி, மலேபோகி என்ற இரு குதிரைகளுக்கும் உணவளித்து அவ்வாலயத்தின் ஓர் புறத்தில் படுத்து அன்றிரவைக் கழித்தான். பின்னர் வைகறையி லெழுந்து காலேக்கடன் முடித்து, நீராடி மலரெடுத்துச் சிவபெருமானைப்பூசித்துச் சிற்றுண்டியுண்டு, ஒணுன் உரையைப் போர்ததுக் கொண்டு வண்ணுத்தி வீட்டை யடைந்தான். வண்ணுததி "அடே நாற்றமெடுதத பயலே! கழுதைகளே ஓட்டிச் செல்லவில்லேயா?" என அவனும் "இதோ ஓட்டிச் செல்கிறேன்" என்ருன். எப்பக்கம் ஓட்டிச்சென்ருலும் வடக்குப் பக்கம் மாத்திரம் ஓட்டிச் செல்லாதே" என்று கட்டளேயிட்டாள் வண்ணுத்தி.

அவ்விதமே சங்குபாலகனும் கழுதைகளேச்சிறிதுதூரம் ஓட்டிச் சென்று ஊர் மறைந்தவுடன் "இவள் எதற்காக வடக்குத்திசைக்கு ஓட்டிச்செல்ல வேண்டாமென்ருள். அத்திசைக்கே இன்று ஓட்டிச் சென்று என்ன நடக்கிறதெனப் பார்ப்போம்" என நிீனந்து வடக்குப்புறமாகவே கழுதைகளே ஓட்டிச்சென்ருன். சிறிதுதூரம் ஓட்டிச் சென்றவுடன் அவைகளே அங்கு ஓரிடத்திற் கட்டிவிட்டு என்ன நடக்கிறதெனப் பார்த்துக் கொண்டிருக்கும்பொழுது சிறிது நேரத்தில் படுத்தபடியே உறங்கிவிட்டான். கழுதைகளெல்லாம் வெயில் தாங்க முடியாததினுலும்; பசியினுலும் தாகத்தினுலும் நாக்குத் தொங்கிப்போய் விழுந்து கிடந்தன. உறங்கினவன் விழித்துப் பார்த்தபொழுது கழுதைகளெல்லாம் உதைத்துக்கொண்டுகிடந்தன. அதைக்கண்ட சங்குபாலகன் "ஆ! காரியம் கெட்டுப் போய்விட்டதே! என்ன செய்வது; இங்கு இப்படிப்பட்ட புல்லில்லாத இடமாயிருப்பதாலேயே வண்ணுத்தியும் நம்மை இத்திசைக்கு ஓட்டிச் செல்லவேண்டாமென்ருள் போலும் நாம் இதை யறியாது இங்கு ஓட்டிவந்ததுமன்றி இப்பொழுது கழுதைகளும் இப்படி உதைத்துக்கொண்டு கிடக்கின்றன" எனநிீனந்து அக்கழுதைகளே யவிழ்த்து விட்டான். அவைகள் தாகத்தினுல் நீரருந்த ஒரு குட்டையி லிறங்கின. நீர் ஆழமா யிருந்ததால் சில கழுதைகள் நீரில் முழுகி மறைந்தன. இதைக் கண்டவுடன் அவைகளேக் கரைக்கு ஓட்டினுன். வெயிலின் கொடுமைக்குப் பயந்து அவைகள் குட்டையிலேயே கிடந்தன. சங்குபாலகன் என்ன பாடுபட்டும் அக்கழுதைகள் கரைக்கு வந்தபாடில்லே. உடனே வண்ணுத்தியிடம் ஓடி நடந்ததைக் கூறினுன். அவள் அடே! உன்னே வடக்கே ஓட்டிச் செல்லாதே

என்றேனே. ஏன் அங்கே ஓட்டிச்சென்ருய் என, அழுதுக்கொண்டு ஓடி வந்தாள். கழுதைகளிற் பாதி இறந்து மிதந்துகிடந்தன. உடனே தன் சேலையின் ஒரு நுனியை இடுப்பில் கட்டிக்கொண்டு மற்ற நுனியை இவனைப் பிடித்துக் கொள்ளவிட்டு ஆழத்தில் முழுகும் வேளையில் கையை உயர்த்துகிறேன். அப்பொழுது சேலையை மேலே இழு என்று கூறி நீரில் இறங்கினுள். போகப்போக ஆழம் அதிகமாகி இவளும் முழுகிவிடப் போகும் சமயத்தில் கையை உயர்த்தினுள். சங்குபாலகன் சேலையை விரைவாய் மேலே இழுத்தான். அச்சேலை வண்ணுத்தியின் இடுப்பினின்று கட்டவிழ்ந்து அவளை நீரில் நழுவவிட்டு அவன் கைக்கு வந்துவிட்டது. பிறகு அவள் நீரில்முழுகி உயிர் துறந்தாள்.

"வஞ்சனை நெஞ்சைப் பிளக்கும்" என்பது போல யாரும் ஒருவரை வஞ்சனையாக நடத்தினுல் இப்படிப்பட்ட ஆபத்தில் தான் சிக்கி மடிவார்கள். ஆதலால் எவரும் வஞ்சனை கலவாத முழு அன்புடன் இயன்றவரை ஏழையாயிருந்தாலும் அவனுக்கும் நலனுதவி புரியவேண்டும். அதுவே இன்பமளிக்கும்.

பிறகு சங்குபாலகன் எங்காவது செல்லலாமென உன்னி அவ்வூருக்கு அடுத்த பட்டணமாகிய உமயாபுரிப் பட்டணத்தை நோக்கி நடக்கலானுன். (தொடரும்.)

அ. ச. அருணுசலேசுவரர், ரூவான்வெல்ல, இலங்கை.

காதலால் துக்கமுண்டு ஈஸ்வரியால் நன்மை யடைந்த

சாந்தவதி.

(முன் தொடர்ச்சி.)

சந்திரபகவானுனவர் தன்னுடைய கிரணங்களை விரித்து, உதயகிரியினின்று வெளிவந்தாலுங்கூடப் பிரகாசமானது அவ்வளவு நன்ருகத் தெரியவில்லை. ஏனெனில் கருமேகங்களானது வானத்திினிடமாக நிறைந்து நின்றபடியால் இருளுடன் கலந்த ஒளியாயிருந்தது. ஆனுல் எதிராகவும் சமீபங்களிலும் புலப்படுவனவெல்லாம் இன்னதென் றறியக்கூடிய பிரகாசமிருந்தது.

மனிதர்கள் ஒருவருக்கொருவர் விடைபெற் றேகுந் தன்மையைப்போல் சிங்கங்களிரண்டும் அம்மாதினிடம் சைகைசெய்து விடைபெற்று வந்த வழியைநோக்கி விரைவாய்ச் சென்றன. அம்மிருகங்கள் அவ்விடம் விட்டுப்போவதை அக்கன்னிகையும் வெகு நேரம் வரையில் இமைகொட்டாமல் பார்த்துக்கொண் டிருந்தாள். அவைகள் போகும் திசையைக் கவனித்திருந்தா ளென்றுலும் இவளுடைய புத்திமட்டிலும் சரியான நிலைமையிலில்லை. ஏனெனில்,

அச்சிங்கங்கள் வந்தசமயம் அவைகளைக்கண்டு பயத்தினால் மிரண்டு திடுக்கிட்ட அந்த அதிர்ச்சியினால பயப்பேய் பிடித்து எழுந்திருக்கவும் சக்தியற்று மயங்கிக் கொஞ்ச நாழிகை வரையில் யாதொன்றும் புலப்படாமல் சுவற்றி லெழுதிய சித்திரம்போல் அசைவற்றிருந்தாள்.

நாழிகையாக ஆக பயமாகிய இருளும் விலகி இவளைச் சூழ்ந்து கொண்டிருந்த திகிலும் மயக்கமும் நீங்கி ஒடத்தலைப்பட்டது. வர வர புத்தியானது பழைய ஸ்திதியில் கொஞ்சங்கொஞ்சமாய் நடமாட ஆரம்பித்து பழைய நினைவுகளும் ஒன்றின் பின்னொன்றாய் வரவே தூங்கி விழித்தவள்போல் தன்னுடைய கரங்களால் முகத்தை நன்றாகத் துடைத்துக்கொண்டு செவ்வையாய் நிமிர்ந்து உட்கார்ந்து பகவானை நினைந்து கரங்களைக் கூப்பி என்னை இக்கஷ்டத்தில் நின்று விலக்கி நற்கதி யெப்பொழுது அருள்வாயோவென்று ஸ்தோத்திரஞ் செய்துகொண்டிருந்தாள்.

உடனே தான் முன்னிருந்த நிலைமையும் இப்பொழுதிருக்கும் ஸ்திதியும் இன்னும் பற்பல யெண்ணங்களும் ஒன்றின் பின் ஒன்றாய் மனதில் நடமாடிக்கொண்டிருந்தது. அத்துடன் சிங்கங்களின் நினைவும் வந்தூடாடியது. அவ்விஷயத்தைப்பற்றியும் இவளுடைய மனமானது ஆராய்ச்சி செய்யத்தொடங்கிற்று.

ஆ! இஃதென்ன விந்தை! கானகத்தினிடமாக வாழ்ந்திடும் மிருகங்களானது மனிதரிடத்தில் இவ்வளவு பணிவுடன் தாழ்ந்து மரியாதை செய்யும் மதிவாய்ந்திருக்கின்றதே! அப்படிப்பட்ட விலங்கினங்களுமுண்டா? இதை யோசிக்க அடங்கொணு ஆச்சரியத்தை தருவதுடன் என்றுங் காணுப் புதுமையாகவுமிருக்கிறது. காட்டில் வசிக்கும் மிருகங்களுக்கெல்லாம் ஒரே புத்தியென்றும், துஷ்ட செந்துக்களென்றும், எதிர்ப்படும் ஜீவப்பிராணிகளைக் கொன்று தின்னும் குணம் வாய்ந்ததென்றும், தனக்குச் சமானமில்லா மிருகங்களையும் வதை செய்யுந் தன்மையுள்ள தென்றும் அநேகரால் கேள்வியுற்றிருக்கிறோம். அதிலும் இவைகளோ மிருகங்களுக்கெல்லாம் அரசனென்றும் எல்லாவற்றையும்விட பலமுள்ளதென்றும் விலங்குகளில் பெரிய ஜெந்துவாகிய யானையை உயிர்வாங்கும் வல்லமையுள்ள தென்றும் பலர் சொல்லக் கேட்டிருக்கிறோம். அக்குணமுள்ள இச்சிங்கங்கள் நம்மைக்கண்டவுடன் கொன்று பட்சிக்க வேண்டியதிருக்க அவ்வாறின்றி தன் கெட்ட குணத்தையும் ஒடுக்கி அன்புபாராட்டி நிற்பதற்குக் காரணமென்ன? ஆனல் சில மனிதர்கள் மிருகங்களின் குட்டிகளைச் சிறுபருவத்தில் பிடித்துவந்து பழக்கி வசப்படுத்தி தங்களின் சொல் கேழ்க்குந் தன்மைக்குக் கொண்டுவருவதுடன் அநேகம் இராஜாங்கங்களிலும் வளர்க்கிறார்களென்று சொல்லக் கேட்டிருக்கிறோம். நாமும் பார்த்திருக்கிறோம். இவைகளையும் மனிதர்கள் வளர்த்திருப்பார்கள்போலும். அவர்களிடத்தில் வெகுநாள் பழகிய

படியால் இவ்வளவுசாந்தம் வாய்ந்திருக்கிறதுபோலும். நானோ யாருமற்ற பேதை. எனக்கு யாரிருக்கிறார்கள். இங்ஙனமிருக்க, இந்த கடிதத்தைச் சிங்கங்களின்மூலம் யென்னிடம் அனுப்பிய புண்ணிய சீலர்கள் யார் என்பது புலப்படவில்லையே? அப்படிப்பட்ட மனிதர்கள யாராயிருக்கலாம் அல்லது ஆதிமூர்த்திதான் ஏழையின்பேரில் கிருபைகூர்ந்து அருள் செய்திருக்கின்றனரோ? ஒருவகையும்தோற்றவில்லையே. இக்கடிதம் நம் நன்மைக்காகவா? அல்லது தீமைக்காகவா? எதுவாயிருந்தாலும் கடிதத்தைப் பிரித்துப் பார்த்தால் எல்லா விஷயங்களும் அறியக்கூடும். அதற்கு இருளும் நிறைந்திருக்கின்றதே யெப்படிப்பார்க்க முடியுமென்று கீழ்த்திசை நோக்கினாள். அச்சமயம் ஓர் உருவம் தன்னை நோக்கி வரக்கண்டு திடுக்கிட்டாள். ஆனால் முன்போல் அவ்வளவு மிரளவில்லை. எது வந்தாலும் நாம்தானே அனுபவிக்கவேண்டும். வேறிடம் போவென்றால் போகுமா யெல்லாவற்றிற்கும் ஈசனிருக்கிறானென்று மனதைச் சிதறவிடாது திடப்படுத்தி தைரியத்துடன் பின் ஆகவேண்டியவற்றை யோசித்தவளாயும் அவ்வுருவத்தால் தனக்கு அவகேடு நேர்ந்தாலும் அதினின்றும் தப்பிக்கும் முன் எச்சரிக்கையுடனு மிருந்தாள். ஆனால் இச்சமயத்திலும் எதிரில் புலப்படும் உருவத்தைப்பற்றி இவளுடைய மனம் ஆராயச்சிசெய்யாமலிருக்கவில்லை. சந்திரனுடைய பிரகாசமானது மங்கலாயிருந்ததினால் எதிரில் நகர்ந்து வரும் உருவத்தை யின்னதென்று சீக்கிரம் கண்டு கொள்ள முடியவில்லை. முன் வந்த சிங்கந்தான இப்பொழுதும் வந்ததோ வென்று ஐயமுற்றாள். சே! அப்படி நினைப்பது தப்பு. அவைகளானால் நாலு கால்களிருக்கும் இவ்வளவு சாவதானமாய் நடக்காது. இது மனிதரே. இதில் யாதொரு சந்தேகமுமில்லையென்று, தனக்குள் சொல்லிக்கொண்டாள். வர வர அவ்வுருவம் சமீபத்துவிடவே தன்னை நோக்கி வருவது ஆண் அன்று. பெண்ணென தீர்க்கமாய் தெரிந்துக்கொண்டாள். அப்படியிருந்தாலும் வருவது பூதமோ ராக்ஷசியோ எதுவாயிருந்தாலும் தானிருப்பது உஷாரா யிருக்கவேண்டுமென்று பக்கத்தில் கிடந்த கத்தியொன்றைக் கையிலெடுத்துக்கொண்டு யெழுந்தாள்.

இதையறிந்த எதிரில்நின்ற பெண் "அம்மா பயப்படாதே. நானும் உன்னைப் போன்றவள்தான்" என்றாள்.

பெண்:—என்னைப்போ லுள்ளவளா? அப்படியானால் இராக்காலத்தில் உனக்கு இங்கு என்ன வேலை?

வந்தவள்:—எனக்கு யாதொரு காரியமுமில்லை. ஆனால் ஓர் மனிதரைக் குறிப்பிட்டு வந்தேன்.

பெண்:—எந்தமனிதரைக் குறிப்பிட்டு வந்தாய்? அவர்கள் யார் எங்கிருக்கிறார்கள்?

வந்தவள்:—இங்குதானிருக்கிறார்கள். அவர்களின்பேரை இப்போது சொல்லமுடியாது. பின்னால் சொல்லுகிறேன்.

பெண்:—அப்படியானால் இன்றிரவு இங்கு தங்குவாய்போலிருக்கிறது.

வந்தவள்:—தாங்கள் சொல்வதுபோல தங்குவே னென்றாலும் அப்படித்தங்குவது பெருங்குற்றமாகும்.

பெண்:—என்ன குற்றமாகு மென்கின்றாய்?

வந்தவள்:—அந்த விஷயம் கெட்டதாயிருந்தாலுங்கூட, அது யென்னை ஒன்றுஞ் செய்யாது. ஆனாலும் அது விஷயத்தைப்பற்றிச் சொல்லவும் இது காருணமல்ல. அப்படிச்சொல்லவேண்டுமென்றாலும் அவகாசமில்லை ஆனால் நான் இப்போது இவ்விடத்திற்குவந்த முக்கியகாரணம் யாதென்றால் தங்களுக்கு என்னாலான ஓர் உபகாரத்தை செய்வதற்காகவே. (தொடரும்)

நா. சுப. சாமிநாத உபாத்தியாயர், பக்தகவி ஜோதிடர்,
மாந்தளே, பர்மா,

விபூதி

(187-ம் பக்கத்தொடர்ச்சி)

அநுகற்பம்:—

சித்திரை மாதத்திலே பசுக்கள் நிற்கும் மந்தையிற் போய் உலர்ந்திருக்கிற கோமயத்தைக் கொண்டுவந்து ஓரிடத்திற் குவித்து உரலிலிட்டு இடித்துத் தூளாக்கி அதிற் கோசலத்தை வாமதேவ மந்திரமோதி வார்த்துக் கையினாலே நன்றாகக் கலந்து, அகோர மந்திரஞ்செப்பிப் பிசைந்து உருண்டைபண்ணி நெற்பதரைப் பரப்பி அதன்மேல், சத்புருட மந்திரத்தை யோதிவைத்து சிவாக்கினியினாலே தகித்து ஈசான மந்திரஞ்சொல்லி யெடுத்துக்கொள்ளபடுவதாமென்று காமிகாகமம் ஸ்நானவிதிப்படலத்திலும் தணிகைப் புராணத்திலும் விரிவாகக் கூறப்பட்டிருக்கின்றன.

உபகற்பம்:—

முற்கூறிய விடங்களிற் கோமயம் கிடைக்காதாயின் வனத்தின்கண் மரத்தோடு மரம் இணைந்து தானேயுண்டாகிய அக்கினியினாலே வெந்துவிழுந்த சாம்பலையாவது அல்லது செயற்கையுள்ள செங்கற்சூளை, சுயவன் சூளை முதலியவற்றின் சாம்பலையாவதுகொண்டுவந்து சிவாகமப்படி சேர்க்கப்பட்ட பஞ்சகவ்வியத்தை வாம தேவமந்திரஞ் சொல்லிவார்த்து பாகமறிந்து கையினாலே கலந்து அகோர மந்திரமோதி பிசைந்து உருண்டை பண்ணி நெற்பதரை விரித்து அதன் மேலே தற்புருட மந்திரமோதி வைத்து சிவாக்கினியினாலே தகித்து ஈசானமந்திரஞ்சொல்லி எடுத்துத் தாரணஞ்செய்வதாம் என்று ஆகமாதிகளும் புராணங்களும் வலியுறுத்துகின்றன.

அகற்பம்:—

மேற்சொல்லிய விதமான விபூதி அகப்படாவிடில், இடிவிழுந்த இடத்தில் உண்டாகிய விபூதியையாவது, அல்லது மலையுச்சியிலும், பூமியிலும் யாதொரு காரணத்தினுல்விளைந்த திருநீற்றையாவது எடுத்துவந்து அதனை மூலமந்திரமும் பஞ்சகலா மந்திரமும் சொல்லி சுத்தத்தின் பொருட்டு அபிமந்திரித்துத் தரித்து வருவதாம் என்று நூல்கள் பல முழங்குகின்றன.

நான்கு வருணத்தார்க்குரிய விபூதி:—

முற்கூறிய நால்வகை விபூதியை விளைவிக்க வியலாதவர்கள், சிவபெருமான், உமை, விநாயகர், கந்தர், வைரவர், வீரபத்திரர் முதலியவர்களுடைய சந்நிதானத்தின்கணிருக்கும் யாகசாலையிலே உற்சவ முதலிய காலங்களில் வெந்து விளங்கும் விபூதி, பிராமணர், அரசர் வைசியர் முதலிய மூவர்க்கு முரியதாம். திருக்கோயிலிலும், திருமடத்திலுமுள்ள திருமடைப்பள்ளியிலே பாகஞ்செய்ததினுலுண்டாகிய திருநீறு சாமானிய சூத்திரர்க்குமாகும். காட்டுத்தீயிலே இயல்பாய் விளைந்த திருநீறு நான்கு வருணத்தரல்லாத மற்ற ஏனையோருக்கும் உரியதாகும் என்று பதிசாஸ்திரம் விதந்தோதுகின்றது.

விபூதிப்பை:—

முன்னைப்பழம்பொருட்கு முன்னைப்பழம் பொருளாகிய சிவபெருமானை வழிபடும் சைவ சித்தாந்திகள் அல்லது சிவபக்தர்கள் விபூதிவைப்பதற்கு பட்டுப்பையிலாவது, புலித்தோல், மான்தோல் முதலியவற்றினுல் செய்யப்பட்ட பையிலாவது அல்லது பொன், வெள்ளி, செம்பு, பித்தளை முதலியவற்றினல் செய்யப்பட்ட சம்புடத்திலாவது, வில்வக் குடுக்கை, சுரைக்குடுக்கையிலாவது வைத்துக்கொண்டு தரித்தல் வேண்டு மென்பது நியமம். இவற்றுள் தோலிரண்டும் நைட்டிக பிரமசாரிக்கும், சந்நியாசிக்குமாமென வறிக. குடுக்கைகளின்றிப் பிறவற்றிலுள்ள விபூதியை கவிழக்க லாகாது. கவிழ்த்தவர் ரௌரவநரகமடைவாரென மகுடாகம மோதுகின்றது. விபூதியை யெடுக்கும்போதேனுந் தரிக்கும்போதேனுந் கைதவறி பிரமாணுவளவாயினும் பூமியிற் சிந்தினுல் அவர்கள் எரிவாய் நிரயத்துள் வீழ்வரென சிவாகமங்களும், சிவதருமோத்திரமும், சூதசம்ஹிதையும் கூறுகின்றன. ஆகையால் விபூதி சிந்தில் அதனையெடுத்து, அந்தத்தலத்தை சுத்திசெய்து காளத்திரயம்பண்ணி, சங்கார முத்திரையினுலே அஸ்திர கவச மந்திரங்களினுலே அதனைத் தன்னிடத் தொடுக்கல் வேண்டும். விபூதிப்பை கொள்ளுமிடத்து அதனகலம் எட்டங்குலமும், உயரம் பனிரண்டங்குலமும், வாய்வட்டமா யிருத்தல் வேண்டுமென்றும் சிவாகமங்கள் துணிந்துரைக்கின்றமையால் இங்ஙனம் விரிவாய் துணிந்துரைக்க வஞ்சிவிடுத்தாம்.

(தொடரும்,)

தி. பட்டுசாமி ஓதுவார், திருவண்ணமலை.

செய்நன்றியறிதல்.

செய்நன்றியறிதலாவது தனக்குப் பிறர்செய்த நன்றியை மறவாமை. காரணமின்றிச் சமய சஞ்சீவிபோல் செய்த உதவிக்கும், காலத்தினுற் செய்த உதவிக்கும், பயன் தூக்காது செய்த உதவிக்கும் பூமியையும் சுவர்க்கத்தையும் கைமாருகக் கொடுத்தாலும், அதற்கு இவை சமமாகா. காரணமின்றிச் சமயசஞ்சீவிபோல் செய்த உதவியாவது: தனக்கு முன்னே ஒருதவி செய்யாதிருக்க ஒருவன் பிறனுக்குத் திடீரெனச்செய்யும் உதவி. காலத்தினுற் செய்த உதவியாவது: ஒருவனுக்கு இறுதிவந்தபொழுது ஒருவன் செய்த உதவி. பயன் தூக்காது செய்த உதவியாவது: இவருக்கு இதுசெய்தால் இன்னபிரயோசனங் கிடைக்குமென்று ஆராயாது செய்த உதவி.

"தினைத்துணை நன்றி செயினும் பனைத்துணையாக்
கொள்வர் பயன்றெரி வார்"

இம்மூன்றுமல்லாத உதவியும், அறிவொழுக்க முடையவருக்குச் செய்தபோது, அவருடைய தகுதி எவ்வளவு பெரியதோ அவ்வளவு பெரிதாகும். ஆதலினுல், அறிவொழுக்கமுடையவர் தமக்குப் பிறர் செய்த உதவி தினையளவினதாயினும், அதனை அவ்வளவினதாக நினையாது, பனையளவினதாக நினைப்பர்.

"நன்றி மறப்பது நன்றன்று நன்றல்ல, தன்றே மறப்பது நன்று"

யாவராயினும் தமக்கு நன்றி செய்தவருடைய சிநேகத்தை எந்த காரணத்தை நோக்கியாவது விடலாகாது: ஒருவன்ருனே முன்பு ஒரு நன்றிசெய்து, பினபு தீமை செய்வானுயின் அவன்செய்த அவ்விரண்டினுள்ளும், தீமையை அப்பொழுதே மறந்து, நன்றியை எப்பொழுதும் மறவாமற் கொள்வதே மிக மேலாகிய தர்மம். தமக்கு ஒரு நன்றி செய்தவர் பின்பு நூறு தீமைகளைச்செய்தாராயினும், மேலோர் அந்நன்றி ஒன்றையுமே உள்ளத்தில் வைத்து தீமை நூற்றையும் பொறுப்பர் தமக்கு நூறு நன்றி செய்தவர் பின்பு தீமை செய்தராயினும், கீழோர் அந்நன்றி நூற்றையும் மறந்துவிட்டு அத்தீமை ஒன்றின்பொருட்டு அவர்மேல மிகவும் கடுமையான கோபத்தைக் கொள்வர்.

"எந்நன்றி கொன்ருர்க்கு முய்வுண்டா முய்வில்லை
செய்நன்றி கொன்ற மகற்கு"

எந்தவரங்களை கெடுத்தவர்க்கும் பாபத்தினின்றும் நீங்கும் வழியுண்டாகும். ஒருவர் செய்த உபகாரத்தைக் கெடுத்த மனிதனுக்கு அப்பாவத்தினினறும் நீஙகும் வழியில்லை. செய்நன்றி மறந்தவர் அளவில்லாதகாலம் நரகங்களிலே கிடந்து துன்புற்றுப் பல வியாதியை யுடையவர்களாய் பூமியில் பிறந்து வருந்துவர்.

நல்லவர்களுக்கு செய்த உபகாரமானது கல்லின்மேல் எழுதப்பட்ட எழுத்துப்போல் என்றும் நிலைபெற்று புகழுடன் விளங்கும்

மற்ற அன்பில்லாத அதாவது தீய நெஞ்சமுடையவர்க்குச் செய்த உபகாரமானது ஜலத்தின்மேல் எழுதப்பட்ட எழுத்துக்கு ஒப்பாகும். மூடருக்கு உபகாரம் செய்யின் அவ்வுபகாரம் அழிவதுமன்றி அவவுபகாரத்தைச் செய்தவனும் அழிவான்.

உதாரணமாக உலகமெல்லாம் புகழப்பட்டுவருகிற நம் காந்தியடிகள் இந்தியாவுக்கு தன் பொருள், ஆவி இரண்டையும் தத்தம் செய்து ப்ாமரர்களாகிய இந்தியர்களுக்குத் தன்னுடைய ஜனங்களுக்கு தருவதாகிய பல அரிய கொள்கைகளைப் பலவகையான உபந்நியாசங்களின் மூலமாய் வெளியிட்டு இந்தியர்களுக்கு ஒரு பெரும் பேருபகாரத்தைச்செய்து வைத்திருக்கிறார். இவர் செய்துவைத்திருக்கிற இந்தப் பேருபகாரத்திற்கு, இந்தியர்களாகிய நாம் அவர் ஜனங்களுக்குச்செய்த உபந்நியாசம் தீமையைத் தருவது என்பதாக நினைத்து அதை நீக்கிவிடாது அவர் செய்த நன்றிக்குப் பதில் நன்றியை இந்தியர்களாகிய நாம் எல்லோரும் ஒன்றுகூடி செய்து முடிக்க முயலவேண்டும்.

"சாந்தனையுந் தீயனவே செய்திடினுந் தாமவரை
ஆந்தனையுங் காப்ப ரறிவுடையோர்—மாந்தர்
குறைக்குந் தனையுங் குளிர்நிழலைத் தந்து
மறைக்குமாங் கண்டீர் மரம்"

மரங்களானவை தம்மை மனிதர் வெட்டுமளவும் குளிர்ச்சியாகிய நிழலையே கொடுத்து வெயிலை அவர்மேலே படவொட்டாமல் மறைக்கும். அதுபோல அறிவுடையவர் தாம் இறந்து போமளவும் தமக்கு இறந்துபோகத் தக்க தீங்குகளையே பிறர் செய்தாராயினும் தாம் அவரையும் தம்மாலே ஆகுமளவும் நன்மையையே செய்து காப்பார்.

ஆகவே நாம் ஒவ்வொருவருக்கும் நம்மால் ஆகும் உதவியைச் செய்து, ஒருவர் தமக்குச் செய்த நன்றியை என்றும் மறவாது, அதற்குப் பதிலாகச் செய்யவேண்டி வரும் சமயத்தை எதிர்பார்த்துப்பின் வேண்டிய முயற்சிகளைச்செய்ய முயல்வோமாக. அதற்கு எல்லாம் வல்ல மூலப்பொருள் சமயசஞ்சிவிபோல நின்று துணைபுரிவாராக.

தமிழபிமானி R. சாமிநாதன், இளசை.

பத்திரிகாசிரியர் குறிப்பு:—நண்பர்காள்! உலகத்தில் மானிடராவார் ஒவ்வொருவரும் தாம் செய்யவேண்டியதான சொந்தக் கடமை யாவது நாம் பிறருக்கு உபகாரம் செய்யவேண்டுவதேயாம். இதையே வேதத்திலும் "பரோபகாரார்த்தம் ஹிதம் சரீரம்" என்றும் கூறியிருப்பதானது பிறருக்கு நாம் எவ்விதத்திலும் எதிர்பாராதவகையில் உபகாரம் செய்யவேண்டியதிருக்க, பிறர் நமக்கு உபகாரம் செய்வாராயின் அதைப்பற்றியும் நாம் கூறவும் வேண்டுமோ? நிற்க, செய்நன்றியறிதல் என்பதற்குச் சரியான பொருளாவது பிறர் செய்த

நன்றியை மறவாமல் என்றும் நினைந்துகொண்டிருத்தலேயாம். இஃ தன்றி செய்நன்றிக்குப் பிரதிசெய்த லென்பதன்றும். ஆதலினால் ஒவ் வொருவரும் தாம் தாம் செய்யவேண்டிய கடமையாகிய நம் நாட்டிற் குச் செய்யவேண்டியதான கடமையை நம் நாடு நமக்குச் செய்யும் நன்றியை யனுசரித்து நாம் செய்யவேண்டியதைச் செய்தாகவேண்டு மென்பதை வாசகர்கள் அநுசரிக்க வேண்டுகிறோம்.

ஆன்மாவே புத்ரன் அல்லது உயிரே மக்களாவர்.

(முன் தொடர்ச்சி.)

நாம் குறிப்பிட்டிருக்கிற மற்றொரு விஷயம் பிள்ளைக்கேலாத் தந் தையரின் காரியங்கள். அவைகளை நாம் இப்பொழுது சொல்வதற் குத் தயாராயில்லை பின்னர் வேறொரு சமயங் கூறுவாம். சாதா ரணமாய் நமது குடும்பங்கள்தோறும் மன வொற்றுமை, ஆழ்ந்த நிஜநேசபயபக்தி விசுவாசங்குன்றி நடைபெறுமாறு நேரிடுதலே நம் முடைய நன்னோக்கங்களாய் எவையும் முடிவுறுத் தன்மையாய் போய் விடுகின்றன. இந்த உண்மையைக் கருத்தினிற் கொண்டு மிஸ்டர் கே. ஸி சட்டர்ஜி (Mr. K. C. Chatterji M. A) என்ற மிகப் பெருமை வாய்ந்த பெங்காலி பிரபு ஒருசமயம் அடியிற்கண்ட விதம் பாடியிருக்கின்றனர்.

"Each life's Unfulfilled you see ;
It hangs still patchy and Scrappy ;
We have not sighed deep or laughed face
Starved, feasted, despaired been happy''—Browning.

நம்மனுபவத்திற் கெட்டியபடி பார்க்குமளவில் நாம் நினைத்துச் செய்யும் எவ்வித நல்ல கருமங்களும் முற்றும் பெறுவதற்கில்லாமல் அரைகுறையாகவே முடிவுபெறு நிற்கின்றன. இன்பதுன்பங்களும அவ்வாறேதான். இந்த தேகரகஸ்ய தத்வமுணர்ந்த மேலோர் "ஆத் மாவை புத்ரா நாமாஸி'' என்ற வாக்கியத்தை எண்ணி "பெற்ற மனம் பித்து, பிள்ளை மனம் கல்லு'' என்ற பழமொழிப்படி சோகமு றுமலிருக்கக் கூடவில்லை யன்றோ!

ஆகையால் எந்தக் கார்யத்திலிறங்கிச் செய்யினும், குலாச்சார மதாச்சார ஸநாதன வழக்க வொழுக்கங்களைப் பற்றியும் குடும்பம் நிலைகுலையாவண்ணம் கார்த்தும், தாமரை யிலை நீரைப்போல் ஒட்டி யும் ஒட்டாமலும் நாம் எடுத்துள்ள பிறவி சார்த்தகமாமாறு, வா ணாளை வீணாளாய்க் கழியாது போக்கக்கருதியும், மரணம் என்ப தொன்டென்று பயந்து நிஷ்காமமாய் பிரதிப்ரயோஜன பலனை எதிர் பாராமல், செய்யவேண்டிய விதிகளைச் செவ்வனே செய்து பகவ

தர்ப்பணம் பண்ணிக்கொண்டு காலனை எதிர்நோக்கிய படிக்கிருத்தல் வேண்டும். இவைகட்கெல்லாம் குடும்பத்தலைவர் நன்மைகளைப் பிடித்தொழுகுஞ் சீலராய் தாமே மற்றவர்கட்கு ஒரு தெய்வம் போன்ற வழிகாட்டியாயிருத்தல் வேண்டும். நாம் எந்த கருமத்தைச் செய்வதற்கும் நிச்சலமான மனதுடன் செய்யப்படும் கர்மமே வேதாந்தத்தின் பரமார்த்தமாகிய உண்மைக் கர்மமாம். இவ்வித மனச் சார்புடன் செய்யப்படும் காமந்தான் சிரேஷ்டமானதென்று நமக்கு அநுபவ பூர்வகமாய்த் தெரிந்திருக்கின்றது.

யாதொரு கருமத்தைச் செய்வதற்கும் நமக்குப் பொதுவாய் உண்டாகக் கூடிய மனவெழுச்சி முதலியன வுண்டாகாவிடின், நாம் எங்ஙனம் எக்கருமத்தையேனும் செய்யமுடியும் என அடிக்கடி கேட்கிறார்கள். நானும் அநேக வருஷங்கள் அப்படியே நினைத்தேன். ஆனால் எனக்கு வயதும் அநுபவமும் அதிகரித்து வரவர, அது உண்மையல்லவென்று தெரிந்துகொண்டேன். காமாதி மனவெழுச்சிகள் எவ்வளவுக் கெவ்வளவு குறைகின்றனவோ, அவ்வளவுக் கவ்வளவு செய்யப்பட்ட காரியம் சிரேஷ்டமாகின்றது. நமது மனதை இஷ்டம்போல் செல்ல விடுப்போமாகில், நமது சக்தி குன்றி, நரம்புகள் பலஹீனமுற்று, மனம் சஞ்சலமடைந்து கடைசியில் ஒரு காரியமும் ஆகாமற்போகின்றது. கர்மரூபமாய் மாறவேண்டிய சக்தியானது மனோவிகாரரூபமாய் பரிணமிக்கின்றமையால், அவ்வளவு சக்தியும் பயனற்றதாய்ப் போய்விடுகின்றது. மனது அமைதியாயும் ஒரு நிலைப்பட்டும் இருக்கும்பொழுதுதான் அவ்வளவு சக்தியும் பிரயோசனம்பயக்கும் கருமம் செய்வதில் பயன்படுகின்றது. இவ்வுலகத்தை யலங்கரித்த மஹா புருஷர்களின் சரித்திரத்தை நாம் கவனிக்குப்பக்ஷத்தில், அவர்கள் மஹா சாந்தமுள்ள மனோநிலைமை பெற்றவர்களென்று தெரியவரும். யாதொரு மூகாந்தரத்தினாலும் அவர்கள் பின்வாங்குப்வர் அல்லர். ஆகையினாலே தான், கோபாவேசமுள்ளவன் அதிகம் செய்யாதிருத்தலும், எப்பொழுதும் கோபங் கொள்ளாதவன் அதிகமானகாரியம் செய்யச் சக்தி உள்ளவனாயிருத்தலும் நிகழ்வது. கோபம், துவேஷம், அல்லது வேறெவ்வித மனோவிகாரத்திற்கும் இடங்கொடுக்கிறவன் இவ்வுலகத்தில் யாதொரு பெரியகாரியத்தையும் செய்துமுடிக்கச் சக்தியுள்ளவனாகான். அதிகமானவேலையைச் செய்பவன் யாரெனில், சாந்தமும், க்ஷமையும் நிச்சலமுமுள்ள மனதையுடையவனேயாம்.

வேதாந்தமானது பாரமார்த்திகத்தை மூக்கியமாய் வியவஹரிக்கின்றது. ஆனால் பாரமார்த்திகம் வியாவஹாரிகத்தைவிட மேற்பட்டதென்பது நாம் எல்லோரும் அறிந்தது. இவ்வுலகத்திலுள்ள நமக்கு இரண்டு குணங்கள் ஸஹஜமா யமைந்திருக்கின்றன. அவற்

றுள் ஒன்று. பரமார்த்திகம் விபாவஹாரிகம் மற்றென்றுக்கும் இவை களைப்பற்றி இப்பொழுது விரிவஞ்சி விடுக்கின்றனம்.

ஆகையால் எல்விதத்திலும் இவ்வேதாந்தமானது அநுபவசாத்தியமென்றேற்படுகின்றது. மேலும் வேதாந்த சாஸ்திரத்திற்கு ஓர் சிறந்த வ்யாக்கியானமெனத்தகும் பகவத்கீதையை நோக்குமிடத்து யாவரும் ஆச்சரியப் படும்படியாய் உபதேச ஸ்தானமானது குரு க்ஷேத்திரத்தில் அமைந்துள்ளது. அவ்விடத்தில் தான் ஸ்ரீ கிருஷ்ணன் இச்சாஸ்த்ரத்தை அர்ஜுனனுக்கு உபதேசித்தார். கீதையின் ஒவ்வொருபக்கத்திலும் ஜ்யோதிமயமாய் பிரகாசிக்கும் கருத்தென்ன வெனின் இடைவிடாது கர்மத்தைச் செய்ய வேண்டுமென்பதே. ஆயினும் அங்ஙனம் சொல்லப்படுவதின் மத்தியிலேயே நித்யமான நிஷ்கர்மத்தன்மையும் சொல்லப்பட்டிருக்கின்றது. இது தான் கர்மத்தின் ரஹஸ்யமென்று சொல்லப்படுவது; இதையடைவதே வேதாந்தத்தின் முக்கிய கருத்தாம். நிஷ்கர்மத்தன்மை (நைஷ்கர்ம்யம்) என்றால் செய்வனவற்றைச் செய்யாது சோம்பற்றனமாயிருப்பதென்று பொருளல்ல, அது வேதாந்தத்தின் கருத்துமாகாது. அஃதங்ஙனமேல், நம்மைச்சுற்றியுள்ள சுவர்கள் அறிவில் சர்வஸ்ரேஷ்டமாகும். ஏனெனில் அவைகளும் யாதொன்றும் செய்யாதிருக்கின்றமையா னென்க. மண்கட்டிகளும், மரத்தூண்களும் உலகத்தில் மஹாஜ்ஞானிகளாய் விடும்: அவைகளும் தொழிலற் றிருக்கின்றமையாற்றான் காமக்ரோதாதிகளுடன் கூடிச்செய்யும் கர்மமும் நற்கருமமாகாது. அயலில் எது எப்படி நடப்பினும் யாதையும் கவனிக்க இந்திரியங்களைச் செல்லவிடாது நாம் செய்யுஞ் சத்கருமத்திற்றானே நன்னோக்குடையவர்களாயிருந்து ஜன்ம சார்த்தகமாம் மார்க்கத்தைத் தேடிக் கொண்டு இருத்தல் வேண்டும். நம்முடன் பின்தொடர்பவை பாபம் புண்ணிய மிவ்விரண்டே. சுபம்! சுபம்!! சுபம்!!!

துறையூர். சுப்பராமய்யர்.

ராமச்சந்திரன் கானனேக்கிச் சேல்வதைப்பற்றி
ஆக்ஷேபணை சமாதானங்கள் அல்லது பகவத்கீதோபதேசம்

(175-ம் பக்கத் தொடர்ச்சி.)

பரமாத்மாவான ராமச்சந்தரன் அன்னையாரின் அன்புள்ள மொழியைக் கேட்டு சிறிது தப்புடைய முகத்தைச் சுளித்துக் கொண்டு அஞ்சலியஸ்தராய் (கைகூப்பியபடி) அம்ம! நான் இப்பொழுதே தண்டகாரண்யஞ் செல்கின்றேன்; தங்கட்கும் விதேக ராஜன் மகளுக்கும், லக்ஷ்மணனுக்கும் மகத்தான பயத்தையும் துக்கத்தையுங் கொடுக்கக்கூடிய இந்த விஷயம் நீவிர் அறியமாட்டீர்கள். தண்டகாரண்யஞ் செல்ல விருக்கும்படியான எனக்கு இந்த ஆஸயத்தினுற் பயனில்லை; எனக்கினி விஷ்டராஸன (தர்ப்பாஸன) மே

யோக்யமேயல்லாமல் வேறில்லை. நான்கும் பத்துங்கூடிய வருஷங்களை அரண்யத்தில் வசிக்கப்போகின்றேன் மது, கந்த மூல பலங்கள் அருந்திதான் ஜீவனஞ் செய்யவேண்டும். ஸர்வஸ்வத்தையும் த்ய ஜித்து கேவலம் முனி வேஷத்துடனிருக்க வேண்டியவனுயிருக்கின் றேன். அனுஜன் பரதனுக்கு மகாராஜன் யுவராஜ்ய பட்டாபிஷே கஞ் செய்யப் போகின்றனர். ஆதலால், நான் நிர்ஜனவனத்தில் பதி னன்கு வருஷங்களைக் கழிக்கும்பொருட்டாய் இதோ செல்லவிருக் கின்றேன்'' என்ற மொழிகளைக் கேட்ட கௌஸல்யா தேவியார் மூர்ச்சித்து பெரியதோர் ஸால விருக்ஷத்தைப்போல திடீரென்று கீழே விழுந்தனர் மிகுந்த சோகத்தில் மூழ்கித் தரையில் கதலிமரம் போல் வீழ்ந்த. தம் மாதாவைத் தம் கைகளாற்றழுவி மூர்ச்சை தெளிய வைத்து சைத்யோபசாரங்கள் பலசெய்து தேற்றினர்.

உபவாஸ நியமத்துடன் மகா பலஹீனையான கௌஸல்யா தேவி யார் மூர்ச்சை தெளிந்தெழுந்தும் கொஞ்சம் மனதை தைரியம் பண் ணிக்கொண்டு பக்கலில் வீற்றிருக்கும் ராமச்சந்திரனை நோக்கித் தம் கைகளாற் றழுவிக்கொண்டிருக்கும் வண்ணம் லக்ஷ்மணனும் கேட் கும்படி சிலவார்த்தைகளைச் சொல்வாராயினர். "அப்பா, ராமச் சந்திர! பிள்ளைப் பேறில்லா மலடி யொருத்திக்குப் பிள்ளை பிறக்க வில்லை யென்ற ஒரு குறைதான்: ஆனல் எனக்கு நீ பிள்ளையாய்ப் பிறந்தும் இப்பொழுது ஸம்பவித்திருக்கிற நின பிரிவையாற்றக்கூடா மலிருக்கிற துக்கம் அபாரமானது. மகாராஜன் மகா பௌருஷமா (பராக்ரமசாலியா) யிருந்தும் மங்களகரமான சுக சந்தோஷத்தை நான் காணவில்லை. இனி நின்னல் அளவற்ற சந்தோஷாதிகளைப் பெறலாமெனறிருந்தேன; ஸாபதநி (சக்களத்தி) களின் கர்ணகடூர கொடிய வார்த்தைகள் பல என் ஹிருதயத்தைப் பிளந்து கொண் டிருப்பதால் நான் மிகவு மெலிவடைந்து தளர்ந்திருக்கின்றேன். இத்தகைய என்னுடைய சோகமும, விலாபமு (அழுகையு) ம் எல்லை யற்றதாயின. இவ்வுலகில் ஸ்த்ரீகட்கு இத்தகைய கொடுந் துக்கத் தைக் காட்டிலும் மலடி யொருத்திக்குப் பிள்ளையில்லாக் குறையாம் ஒரே துக்கந்தானே! நீ என்னைவிட்டுப் பிரயாணப்பட்டுப் போய் விட்டால், பற்பல விதத்தில் என்னுடைய துன்பம் பெருகி மரணம் ஸம்பவிக்கும் திண்ணம். கைகேயினுலும் அவள் பரிவாரங்களினுலும் நான் அவமதிக்கப்படுவேன், நிச்சயம. மகாராஜனுக்கும் வேண்டா வெறுப்பாய்விடுவேன். கைகேயியின் புத்ரனுடைய உத்திரவை எதிர் நோக்கி எவரும் என்னை மதித்து வார்த்தை பேசமாட்டார்கள். என்னுடைய ஸ்வஜன பரிவாரங்களும் என்னை இகழ்ந்து அவமதிப் பார்கள். மகா தௌர்பாக்கியசாலியான நான் தினந்தோறும் கைகேயியினுடைய ஆக்ரோசனமான வார்த்தைகளைக் கேட்டுக் கொண்டு அவளுடைய முகத்தில் விழிக்கத்தான் மனந்துணியுமா? கர்ப்பாஷ்டமத்தல் நினக்கு உபனயனமான பிறகு, இப்போது பதி னேழு வருஷங்களாயின. உனக்கு தகுந்த பருவ வயது வந்து விட்

டது. என் துன்பத்திற்கு முடிவேற்பட்டுவிடும். நின்னால் சகல சுக சந்தோஷாதிகளைப் பெறலாமென்றெண்ணினேன். அந்த என்னுடைய எண்ணமாறி எல்லையற்ற கொடிய அனர்த்தங்களாய்முடிந்தது. நான் எவ்வாறு சகிப்பேன்! ராக்வ! ஸாபத்நிகளின் கொடுமைகளினல் கிருசபாவத்தை யடைந்திருக்கிற நான் பூர்ண சந்த்ரனைப் போன்ற நின் முகத்தைக் காணமல் இன்னும் கிருசையாகி நாசத்தைத்தானடைவேன். நின்னை நான் புத்திரனுயடைவதற்காக அனுஷ்டிக்கப்பட்டு வந்த உபவாஸ விரத நியம பிரயாசைகளெல்லாம் இப்பொழுது பயனற்றவை யாயினவே! அப்ப! நின் பிரிவைக் கேட்டும் என்னுடைய நெஞ்சம் ஏன் இன்னும் பிளந்து போகவில்லையோ! என் நெஞ்சம் கல்நெஞ்சமேயோ! புது வெள்ளத்தினல் நதியின் கரை கரைந்து எப்படி நாசமடையுமோ, அப்படியே எனக்குற்ற இந்த துக்க வெள்ளம் என் நெஞ்சத்தைக் கொண்டு போகவில்லையே! நான் இந்த நொடியிலேயே மரணமுறவேண்டியிருக்க, இன்னும் ஜீவனை வைத்துக் கொண்டிருப்பதினல், என் நெஞ்சம் கல் நெஞ்சமே! சிம்ஹத்தைக்கண்ட மான்கன்றொன்றை அழுதுக்கொண்டிருக்கையிலேயே, அந்த சிம்ஹமானது தூக்கிச் செலவதுபோல் என்னுடைய கொடிய துன்பத்தைக்கண்டு மன மிகவருந்திகதறியழும் என்னை நமன் இன்னுங் கொண்டுபோகாமலிருப்பது என் பிராரப்த கர்மமென்றே எண்ணவேண்டியிருக்கின்றதே யல்லாமல் வேறில்லை. இந்தவிதமாய் நின் பின் பிரிவாற்ருமையினல் சம்பவித்திருக்கிற மகத்தான துன்பமே என்னுடைய பிராரப்த கர்மமென்றெண்ணுகின்றேன். சகிக்க முடியாத இப்பேற்பட்ட கொடிய துன்பத்துடன்கூடிய என் நெஞ்சம் இன்னும் படீரென பிளவுபடாமலிருப்பதால் அதை இரும்பென்றெண்ணுகின்றேன். இந்த உலகத்தில் ஸதா துன்பக்கடலிலாழ்ந்து காலமல்லாக் காலத்தில் தவித்துக்கொண்டிருக்குமென்னைக் காலனும் கொண்டுபோகாதிருப்பதேன்! களர்பூமியில் விதைக்கும் விதைக்கொப்பாய் எனது நியம உபவாஸாதி விரதானுஷ்டானங்களெல்லாம் நிஷ்பலங்களாயின. ஆகலின், கன்றைப் பிரிந்த பசுவானது கதறுமாப்போல் நானும் நின் பிரிவாற்ருமல் கதறியழலானேன்! சந்திரனுக் கொப்பான காந்தியைப்போன்ற ராமச்சந்த்ர! என் பிழைப்பு இவ்வாறு வீண்பிழைப்பாயிற்றே! நின்னையன்றி எனக்கு வேறுவழி (கதி) யில்லவேயில்லை. கன்றைத் தொடரும் பசுவைப்போல் நின்கூட வனம் நோக்கி நானும் வரத்தான் வேண்டும். நீயும் என்னை வனத்திற்கு அழைத்துச் செல்லத்தான் வேண்டும்" என்று இவ்விதம் மகத்தான துக்கத்தினல் ராம ஸன்னிதானத்தில் பரிதாபப்படத்தக்க கின்னரி (மான் பேதம்) யைப்போல் கதறி அழுதனர்.

(தொடரும்)

துறையூர் மா. சுப்பராமய்யர்.

மிருகாவதி.

(116-ம் பக்கத் தொடர்ச்சி)

அன்று அங்கு தோன்றிய ஆடவச் சிறுவர்களில் ஒருவன் மற்றவனை நோக்கி "தோழ! நேற்றையதினம் இங்ஙனம் நிகழ்ந்த "வனஜோத்ஸவம்" எத்தனை சிறப்பாயிருந்தது பார்த்தனையா?" என, மற்றவன் "மித்ர! மகோற்சவம் எனபதற்குக் கேட்பானேன். ராஜதநய! கற்பகமுங் காமதேனுவுமுள்ள இந்த விண்ணவருடைய நன்னகரத்தில் நிகழுங் காரியங்களே அற்புதமாய்த்தா னிருக்கும்" என்றான்.

"வஸிஷ்டரும், பரத்துவாஜரும் முன் செய்திருக்கும் விருந்தைப்பற்றிக் கேள்வியுண்டோ? வஸந்த! இப்பொழுது தேவபதி சுயமாய்ச் செய்து முடித்த உர்சவம் மகோற்சவமாய் நேத்திரானந்தகரமாகவேயிருந்தது. என் பிதாவைப்போலவே தேவேந்த்ர மகாராஜன் என்னையு மதித்து விசுவாசிக்கவெண்ணி இந்த திவ்விய காட்சியைக் கண்டுகளிக்க இங்கு வரவழைத்திருக்கின்றனர் போலும்" என்றான் சஹஸ்ரானீகன்.

மிருகாவதி:—கண்மணிகாள்! இந்தப்புமான்களின் அமுதம் போன்ற மொழிகளால் நாம் முன் யூகித்தபடியே இது தேவ "நந்தனம்" என்றறிகின்றோம். இந்த அழகு வாய்ந்த (சஹஸ்ரானீகனைச் சுட்டிக்காட்டிக்கொண்டே) கெம்பீரமான தோற்றமுடைய புருஷர் ராஜகுமாரனென்றும் மற்றவர் அவருடைய முக்கிய தோழரென்றும் அவர்களுடைய வார்த்தைகள் தெரிவிக்கின்றன. இன்னும் அவர்களுடைய வார்த்தைகள் தெரிவிக்கின்றன. இன்னும் அவர்களுடைய இன்பகரமான வார்த்தைகளைக் கேட்போம், என, மற்றவர்களும் அவ்விடத்தே அமைதியாயிருந்து கேட்கலாயினர்.

வஸந்தன்:—தோழ சஹஸ்ரானீக! நேற்று நிகழ்ந்த உர்சவத்தில் அரம்பையராதி தேவஸ்திரீகளுடைய ஆடல் பாடல் துந்துமி முதலிய வாத்ய கோஷங்கள் பிரம்ஹானந்த முறச்செய்தன. இன்னும் என்ன அற்புத விநோத காட்சிகள் நிகழவிருக்கின்றனவோ!

சஹஸ்ரானீகன்:—தோழ! ஒரு இரகஸ்யத்தைச் சொல்லுகின்றேன் கேள்.

மிருகாவதி:—மிகுந்த ஆவலுடன் என்ன இரகஸ்யமென உற்றுக் கேட்டுக்கொண்டிருக்கின்றாள்.

சஹஸ்ரானீகன்:—நான் முன் பிறப்பில் அஷ்டவசுக்களில் முதன்மையான விதூம வசுவென்றும், சதுர்முகன் சபையில் அலம்புஸை நடிக்கையில் அவளுடைய மேலாடை யொதுங்கி யதில் காணப்பட்ட அங்கவெழிலை நான் கண்ட குற்றத்திற்காக எனக்கிந்த ஜன்மங்கிடைத்த தென்றும், அந்த தேவதாசி மிருகாவதி என்னும்

பெயருடன் அயோத்தி வேந்தனும் கிருதவருமனுக்கு புத்திரியாய் வந்து பிறந்திருக்கிருளென்றும், அவள் எனக்கு தரும பத்னியாவாளென்றும், தேவராஜா என்னிடம் ஏகாந்தத்தில் உரைத்தனர்.

மிருகாவதி :—ராஜகுமாரன் குறையுஞ் சொல்வதற்குள் தன் தோழிகளைப் பார்த்து தோழிகாள்! கேட்டீர்களா தத்வத்தை (ராஜகுமாரனைச் சுட்டிக்காட்டி) எனக்கும் இந்த இளவலைக்கண்ட நிமிஷமுதல் என்னுடைய மனமானது என்னுடைய வசத்தில் நில்லாமல் அவர்பால் செல்லா நிற்கின்றது, என்று சொல்லி முடிப்பதற்குள் கமலாக்ஷியும், அடி நங்கையர்க் காசியே! மிருகா! எனக்கும் மற்றவர்பால் மனம் நாட்டமிருக்கின்றது" என்ருள்.

சஹஸ்ராநீகன்:—அவர் உரைத்த அந்த கொடியிலேயே மிருகாவதியின் வடிவழகு என் பன்திற்குள் புகுந்து வருத்தமுறச் செய்கின்றது. மனோபாவனையினுலே அன்னவளை நான் கண்டு கொள்ளாதிருந்தாலும் பிரமஹ தேவனைப்போல் சிருஷ்டித்து எனது உள்நோக்கினுல் கண்டுகொண்டேன் அந்தப்பெண்கள் நாயகத்தை எப்பொழுது காணுவேன், என்னுடைய மனதி ஞற்றலே யாற்றிக் கொள்வேன்.

மிருகாவதி:—(கேட்டுத் திடுக்கிட்டு) எனக்கவர்மீதில் பற்றுதலுண்டாகின்றது. என்னைக் காணுதிருக்கையிஞலேயே அவர் என்னுடைய மனதைக் கொள்ளைகொண்டுபோஞர். மாரனும் சந்திரனும் கெட்டார்கள். இந்த சக்ரவர்த்தியின் மனமதாகிருதிக்கு ஈடு ஜோடு இல்லவேயில்லை. சூரியனது காந்திபோல் அவருடைய திருமேனி எனது கண்களைப் பறிக்கின்றதே! என, கமலாக்ஷியும் (மதிமயங்கி வஸந்தனைச் சுட்டிக் காட்டிக்கொண்டு) எனது பஞ்சபூதங்களையும் அவருடைய தோழர் கொள்ளை கொண்டனர்.

கலாவதி ரூபாவதி இருவரும் மிருகாவதியையும், கமலாக்ஷியையும் பார்த்து, "வெகு நேர்த்தி! உங்கட்குகந்த நாயகர்களை நீங்கள் வரித்துக்கொண்டீர்களே! நாங்கள் என்செய்வது! உங்களை விட்டுப் பிரிய நேரிடுமோவென்ற அச்சந்தான் பாதிக்கின்றது" என,

மிருகாவதி:—கலா! ரூபா! சற்றுப் பொறுங்கள். ஏன் அவசரம்? ஸ்வப்னத்தில் சொன்னபடி பெரியவர் வாக்கு பொய்க்கலாகுமோ! ஒருகாலும் ஆகாது! ஆகாது!! நாம் பிரிந்திருக்கும்படி சம்பவிக்கவே மாட்டாது" என்றவ்விருவருடைய கண்களினின்று மொழுகிய நீரைத் துடைத்து சமாதானங் கூறினள்; பிறகு தோழியர்களை நோக்கி, இன்னும் அவர்கள் பேசிக்கொண் டிருப்பதிலிருந்து, நாம் முக்கியமாய்த் தெரிந்துகொள்ள வேண்டியதை கவனிப்போம்" என்றனள்.

வஸந்தன் :—"இந்திரனுக்கும் வேலையில்லை, உனக்கும் வேலையில்லை. அவன் சதா பெண்மயக்கில் அலைபவன். நின்னையும் அம்மயக்கில் வீழ்த்துகின்றனன் போலும். இனி இங்கு கால் விநாடியும்

தங்கலாகாது. புறப்படுவோம் கௌஸாம்பி நோக்கி" என்று கடிந் துரைத்தனன்.

சஹஸ்ரானீகன்:—தேவேந்த்ரனைச் சாமானியமாய் நினைத்தனை போலும். அவன் மொழிந்த மொழிகளை முற்றுங்கேள். நான் மிருகாவதியை மணம்புரிந்து சுகித்து ஒரு நற்சுதனை அவளிடம் பெற்றுக் களித்து, தெற்குக் கடற்கரையிலிருக்கிற சக்ர தீர்த்தத்தில் நாம் தம்பதிகள் கூடி ஸ்நானம் பண்ணினால் சாப விமோசனமாகுமென்றும், அவ்வாறே நீங்கள் தோழர்கள் மூவரும் என்னைப்பற்றி வந்தவர்களாகலின் ஒரே காலத்தில சாப விமோசன மாகுமென்றும் உரைக்கலாயினர்.

மிருகாவதி:—"அடி கலா, ரூபா! நான் சற்றுப் பொறுங்கள் என்றுரைத்தேனன்றோ! ராஜகுமாரன் நீங்கள் மூவரும் என்று மொழிந்ததிலிருந்து, நமது கபலாக்ஷியால் வரிக்கப்பட்ட இந்த வஸந்தனை யல்லாமல் மற்றிருவர் இருப்பதாகக் காணப்படுவதால் அன்னவர்கள்தாம் உங்கள் நாயகர்களென்று தெரியவருகிறது. வருந்துதலொழிந்திருங்கள்" என்றனள்.

வஸந்தன்:—நற்றோழ! ஒரு தேவதாசியின் வஸ்திராஞ்சலமொதுங்கியதிலிருந்து வந்த அனர்த்தமா இந்த மானிடப்பிறவி சாதாரணமாய்க் காணப்படுவதை கண்களால் பார்த்தலும் குற்றமாகுமே யானால், கண்களை இறுக மூடிக்கொண்டு எவற்றையும் பார்க்கக் கூடாதபடி இருத்தல் வேண்டும்போலும், கேவலம் திருஷ்டி தோஷத்தால் இத்தகைய துன்பம் நேரிட்டிருப்பதால், அகலிகையை மாய வடிவங்கொண்டு துராக்கிருதமாய்க் கூடிய இந்திரன் என்னவானான்! ஏன் அவன் இந்த்ர பதவியிலிருந்து நழுவினானில்லை

சஹஸ்ரானீகன்:—வஸந்த! அவன் ஒரு யோனிக் காணிசப்பட அவனுடைய சரீரமாத்யந்தம் யோனிமயங்களாயினவே போதாவோ! அதனால்தான் இந்த்ரனை சஹஸ்ராக்ஷன் என்றுங் கூறுகின்றார்கள்.

வஸந்தன்:—அங்ஙனமாயின் நம்முடைய கண்கட்கு அப்படியவன் காணப்படவில்லையே?

சஹஸ்ரானீகன்:—அப்பா மித்ர! இந்த்ரன் இக்கொடிய சாபம் பெற்றதும், அவன் பணிந்து வேண்டிக்கொள்ள, பிறருடைய கண்கட்கு அங்ஙனம் தோன்றாதபடிக்கும் அருவெறுப்பான யோனிமயங்களான தன் சரீரத்தைக்கொண்டு இன்றும் மனம் வருந்துதலொழிந்திலன் ஆனால் வான்மீகி மகா முனிவரால் இயற்றப்பட்டுள்ள ஸநாதன கிரந்தமாயின்றும் விளங்கிக்கொண்டிருக்கிற ஸ்ரீமத் ராமாயணத்தில் இந்த்ரனுற்ற சாபத்தை வேறுவிதமாயுங் கூறப்பட்டிருக்கிறது. அதைப்பற்றி வேறு சமயத்தில் கூறுகின்றேன்.

(தொடரும்)

துறையூர் மா. சுப்பராமய்யர்.

இரக்தாக்ஷி வருஷத்திய ரஞ்சித போதினியின்

திருக்கணித சர்வ முகூர்த்தப் பஞ்சாங்கம்.

கலியுகாதி 5026—சாலிவாகனம் 1847 —பசலி 1333---ஹிஜரி 1342

கொல்லமாண்டு 1099-1100, இங்கிலீஷ் **1924**ஹு

ஆடி௴	ஜூலை௴ / ஆகஸ்டு௴	வாரம்.	திதி.	நக்ஷத்திரம்	அமிர்தாதி யோகம்.	விசேஷங்கள்.
1	16	புத	O 28-33	பூரா 11-8	அமி 60	பௌர்ணமி
2	17	வியா	பிர 21-8	உத் 5 23	சித் 60	ஆஷாடபகுளம்
3	18	வெ	துதி14-50	திரு 0-38	ம 0-38 சி	அவமாகம், விதை
				அவி57 20		விதைக்க
4	19	சனி	திரி 9-58	சத 55-43	அ 55-43	யாத்திரைசெய்ய
5	20	ஞா	சது 6-53	பூ 55 58	சி55-58 அ	மந்திரம் ஜெபிக்க
6	21	திங்	பஞ் 5-33	உத் 58-5	சித் 60	சீமந்தம், நிஷேகம்
7	22	செவ்	சஷ் 6-20	ரேவ 60 0	சித் 60	திருதினஸ்பிருக்
8	23	புத	சப் 8-40	ரேவ 2-0	மர 60	சிம்மாயனம்10-20
9	24	வியா	அ 12-38	அசு 7-33	அ 7-33 சி	பிரயாணம் விலக்கு
10	25	வெ	நவ 17-50	பர 14-5 *	சித் 60	கிருத்திகை
11	26	சனி	தச 23-38	கிரு 21-20	அமி 60	விருட்சம்வைக்க
12	27	ஞா	ஏ 29-35	ரோ28-43	சித் 60	சர்வ ஏகாதசி சீமந்
13	28	திங்	து 35-20	மிரு 35 55	அ35-55சி	தானியம் செலவிட
14	29	செவ்	திர 40-25	திரு 42-33	ம 42 33 சி	பிரதோஷம்
15	30	புத	சது 44-43	புன 48-20	சித் 60	மாடு வாங்க
16	31	வியா	● அ 48-5	பூச 53-5	அ 53-5 சி	சர்வ அமாவாசை
17	1	வெ	பிர 50-13	ஆயி56-50	மர 60	சிராவண சுத்தம்
18	2	சனி	துதி 51-20	மக 59-30	அ59-30 சி	சந்திர தரிசனம்
19	3	ஞா	திரி 51-18	பூர 60-0	சித் 60	ஆடிப்பூரம்
20	4	திங்	சது 50-40	பூர 1-8	சித் 60	நாக சதுர்த்தி
21	5	செவ்	பஞ் 47-58	உத் 1-45	அ 1-15 சி	நாக, கருடபஞ்சமி
22	6	புத	சஷ் 44-38	சித் 59-18	ம 0-55 சி	சூரியசஷ்டி
23	7	வியா	சப் 40 23	சுவ 56-43	அ56-43சி	உபாகர்மம்
24	8	வெ	அ 35-20	விச 53-15	சித் 60	வரலக்ஷ்மி விரதம்
25	9	சனி	நவ 29-23	அனு 49-0	சித் 60	பிரயாணம் விலக்க
26	10	ஞா	தச 22-48	கே 44-18	ம44-18 அ	ததி விரதாரம்பம்
27	11	திங்	ஏ 15-50	மூல 39-18	சி39-18 ம	சர்வத்ர ஏகாதசி
28	12	செவ்	துவ 8-45	பூரா 34-10	சி34-10 அ	பிரதோஷம்
29	18	புத	திர 1-50	உத் 31-55	அ31-55 சி	அவமாகம்
			சது 55-23			
30	14	வியா	○ 49-33	திரு 25-18	சித் 60	பௌர்ணமி சங்கிர
31	15	வெ	பிர 45-3	அவி22-0	சித் 60	சிம்மரவி 47-53